# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் ௬ | 23–11–47 | இதழ் 26

## ஒலி

### அங்கும்

—✲—

சந்திர மண்டலத்திலே ஏற்படும் ஒலியைக்கண்டறிந்து, இங்கு ஒலிக்கும்படி, செய்யும் விஞ்ஞானக் கருவியின் வெற்றியால் சென்ற கிழமை, அரைமணி நேரம், சந்திர மண்டலத்தின் ஒலி எதிரொலித்து, ஆராய்ச்சி நடைபெற்றது.

### இங்கும்

—✲—

தீபாவளிப் பண்டிகைக்காக, பட்டாசுக்கட்டுகள் வெடித்த ஒலி, இங்கு, புராணங்களின் துணையால், சென்ற கிழமை பழைமை விரும்பிகளின் மனம் குளிருமளவுக்குக் கேட்டது. 'நரகாசுரவதை' பற்றிய புராணம் படிக்கப்பட்டது.

# "நானிருக்க பயமேன்"

[சீர்த்தொண்டன்]

"ஏண்டி கற்பகம் இன்னுமா புறப்படாம இருக்கே? உன் வாச் (watch) என்னடி கெட்டா போயிடுத்து. சுருக்க ஸ்டார்ட் (start) பண்ணேண்டி" என்றாள் ஜானகி பரிதாபமான குரலில்.

க:— இன்னிக்கி எங்கடி போறது? இப்போ நவராத்திரி யோன்னோ, மயிலாப்பூர்லே ரொம்ப வேடிக்கையாயிருக்குமா. கபாலி கோயிலுக்குப் போகலாமோ?

ஜா:—அடி அசடே, அந்த 'காணக்கண் கோடி'' சாமி பழையசாமி, இப்பொழுது சர்வவியாபி சாயிபாபாக் காலமடி. பழையன கழிதலும் புதியன புகுதலும் இது தாண்டி. மயிலாப்பூர்லே சாயிபாபா படம் இருக்கொன்னோ, அங்கே இந்தநவராத்திரியிலே ஒவ்வொரு நாளும் இரண்டு கச்சேரி நடக்கின்றன. இங்கே போகிறகூட்டம் அளவற்றது. கபாலி கோயில் வேடிக்கைகூடப்பிரயோஜனமில்லையாம். சாயிபாபா மடத்தை வெகு ஜோரா சிங்காரிச்சிருக்காளாம். இதைப் பார்க்கத்தான் "காணக்கண் கோடி" வேண்டுமாம். ஏன், கோடி கூட போதாதாம்! அவ்வளவு பிரமாதமா பேசறாளே நோக்குத் தெரியாதாடி ?

க:—ஆமாண்டி, ஆமாண்டி மறந்தே போயுடுத்து.

ஜா:—என்னடி மறந்துபோச்சு. நீ அங்கே போறதில்லையாக்கும்.

க: —போகாமெ என்னடி. என்னை ரொம்பக் கூப்பிடரவர் அந்தக் "கபாலி" தாண்டி. சாயிபாபா மடத்துக்குமாசத்திலே ஒருநாளைக்கு போவேன்.

ஜா:—சரி, இன்னிக்கு இரண்டு பேரும் போகலாம், சீக்கிரம் புறப்படு.

க:—இதோ வந்து விட்டேன். only five minutes.

* * *

மயிலே சாயிபாபா மடம் மனோரம்மியமாகக் காட்சி யளிக்கிறது. விசாலமான ஓலைப்பந்தல். பூக்களால் அலங்கரிக்கப் பட்ட சாயிபாபா படம் கணகாட்சியாக விளங்குகிறது. பக்த கோடிகள், இல்லை, பக்த ஆயிரங்கள் பாபாவைப்பார்த்துப்பரவசமடைகின்றனர். சங்கீதக் கச்சேரி நடக்கிறது மெய்யன்பர்களை மகிழ்விக்க. மின்சார விளக்குகள் ஜெகஜ் ஜோதியா யிருக்கின்றன. அங்கே வந்துள்ள பெண்ணடியார்களின் தகடு சேலைகள், பெங்கால் சில்க், பெனாரீஸ் சில்க், ஜார்ஜெட், இன்னும் பலரகங்கள் கண்ணைக்கவருகின்றன. ஏன், கருத்தையும் தான். மின்சார ஒளியிலே அம்மையார்களின் வைர நகைகள் தங்கள் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த சாயிபாபா மடத்திற்கு வந்து சேர்ந்தனர் ஜானகியும் கற்பகமும்.

க:—என்னடி ஜானகி இந்த ஏராளமான கூட்டத்திலே எப்படியடி இடிபட்டுக் கொண்டு போறது?

ஜா:—என்னடி என்னமோ புதிய வளாட்டும் பேசறயே. கூட்டத்திலே இடிக்கிறதும், இடி படறதும் தோஷமில்லடி. உடம்பு நோகமே சாயிபாபாவைப் பார்க்கறதற்கு அவா என்ன அவ்வளவு Cheap சாமியா?

க:—இல்லடியம்மா, புரிஞ்சுது.

* * *

ஜானகியும் கற்பகமும் பாபாவின் தரிசனத்தைக் கண்டனர். சிறிது நேரம் கச்சேரியைக் கேட்டுவிட்டு வீடு திரும்புகின்றனர்.

ஜா—அடி கற்பகம், இப்பத்தான் மணி ஏழே முக்கால் ஆகிறது. இன்னொரு கால்மணி நேரம் இப்படி சித்தே நிண்ணுட்டு சரியா எட்டு மணிக்கு வீட்டுக்குபுறப்படலாம்.

"ஏண்டி, கச்சேரியை விட்டுப் போக மனசு வரலையாக்கும்" என்று சொல்லி கற்பகம் ஜானகியின் முகத்தை நோக்கினாள். ஜானகியின் முகம் வாட்டமடைந்திருந்தது. சாயிபாபா படம் என்று பெயரைச் சொன்னாலே புன்னகைபுரியும் முகம் அம்மடத்திலேயே யிருந்தும் கவலை தோய்ந்திருந்தது.

"என்ன, ஜானகி கோயிலுக்கு வந்தும் உன் குறை தீரவில்லை போலிருக்கே" என்றாள் கற்பகம்.

ஜா:—ஆமாண்டி, அந்த வேதனையையேண்டிகேக்கறே. சாமியைப்பாத்தாச்சு. ஆனால்............

* * *

இத்தச் சமயத்திலே "எப்போ வருவாரோ" என்ற பாட்டை தடபுடலாக பாடுகிறார் கச்சேரி செய்பவர், ஜானகியின் வேதனை அதிகப்படுகிறது.

க:—யாரைப்பற்றியடி எண்ணிக்கொண்டு ஏங்குகிறே! உனது ஆசைமுகம் மறந்து போச்சோ என்னமோ அவருக்கு.

ஜா:—என்னடி கற்பகம், இப்பத்தானு கேலி பண்றது. எங்க எதிராத்திலே இருக்காரே. என்னுடன் பி. ஏ. வகுப்பில் படித்தவர்...........

க:—அவரா? அப்பொழுது நீ சாயிபாபாவைத் தரிசிக்கவோ கச்சேரியைக் கேட்கவோ வரலையா. உங்க சந்திப்பு இடம்தானு இந்த சாயிபாபா மடம்!

ஜா:—நீ என்னடி விபரீதமான விஷயத்தை எல்லாம்கூட வேடிக்கையாகவே, பேசறே.

* * *

இச்சமயத்தில் இவர்கள் பின்னலிருந்து "நானிருக்கபயமேன்" என்ற குரல் கேட்டது. அக்குரல்யாருடையது என்று நினைக்கிறீர்கள்?-ஜானகி தேடினாளே "அவர்", அந்த அவரே தான்! ஜானகியின் முகம் "அன்றலர்ந்த செந்தாமரையினையொன்றது."

* * *

"என்ன பிரதர், இன்னிக்கு ரொம்ப டல்லா (Dull) இருக்கிறதே. அப்படி ஒரு ரவுண்டு போயிட்டு வரலாமா?" என்றான் சுகுமாரன்.

"ஆமாம் பிரதர் எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. பீச்சுக்குப் போகலாமா?" என்றான் சுந்தரம்.

சுகு:—என்னய்யா, பீச்சுக்போயி மண்ணையும் தண்ணியையு தானு பார்க்கணும். உனக்கு நல்ல இடம் Choose பண்றதுக்குக் கூட தெரியவில்லை, இப்பொழுது நவராத்திரி என்பதனை மறந்துட்டியா. மயிலாப்பூருக்குப்போனு நம்மமந்தமெல்லாம் போகும்!

சுந்: —மயிலாப்பூரிலே எங்கே பிரதர் போறது?

(19-ம் பக்கம் பார்க்க)

# துகிலுரிந்த துச்சாதனி!

## பாபிலோன் புராணம்

### இன்று இல்லாத இஷ்ட தேவதைகள்

—●—

"வாயில் காப்போய்! வாயில் காப்போய்! வருவாய் விரைந்து, கதவு திறக்க. காதலன் உள்ளான், கடுகித்திறவாய்! காண்பேன் அவனை, கதவு திறமினோ! திறந்திட மறுத்தால், இருந்திடேன் வாளா! தூள் தூளாகும் தெரிவாய் கதவும். தொடர்ந்து உடைப்பேன் தோல்கத வெல்லாம், வாயில்காப்போய்! வருக விரைந்தே! இறந்தோரை எழுப்பி, இருப்போர் மீதேவி இல்லா தொழித்திடுவேன், இதை நீ அறிக! இருப்போர் சிறுதொகை, இறந்தோர் மிகுதி எனவே, உடனே, திற நீ, கதவு"

* * *

காதலனைக்காணாது, எங்கெங்கோ தேடி அலுத்து, உடல் இளைத்து, உளம் பதைத்துப்போன காரிகை; அறிந்தாள் அவன் இருக்குமிடம். அங்கு கட்டுஉண்டு காவல்உண்டு, கடுவிஷக்கண்ணரூண்டு, கதவுகள் பல உண்டு, காட்டு முறைகளுண்டு, என்று கேள்விப்பட்டாள்—ஆனால் காதலன் அங்குளான் என்பதறிந்ததும், இவையெலாம் மறந்தாள், ஏகினாள் கடுகி, தாளிடப்பட்ட கதவுகண்டாள், தடதடவெனத் தட்டி நின்றாள், திறந்திட யாரும் வராதது கண்டு, காரிகை கூவினாள்,

"வாயில் காப்போய்! வாயில் காப்போய்! வருவாய்விரைந்து கதவு திறக்க" என்று.

இவ்வளவு போதும், இங்குள்ள கலாரசிகர்களுக்கு — படித்துப் படித்து, ரசித்து, ரசித்து, பதங்களைப் பிரித்துப் பிரித்து, பொருள் உரைத்துப், பூரித்துப்போவர், கேட்போர் பூரிக்காவிடினுங்கூட.

காதலியைத் தேடி ஓடிடும் காதலனைப்பற்றியே கேள்விப்பட்டுள்ளோம்; இதோ புதுமை, அருமை, காதலனைத்தேடி அலைகிறாள் காதலி! காடுமேடு மட்டுமோ? அல்ல! அல்ல! இருக்குமிடம் தெரியும்வரை தேடித் திரிகிறாள். கண்டாள் இடத்தை—கொண்டாள் வேட்கை—விண்டாள் தன் விரகத்தை கவிதாசக்தியுடன். கவிதை அறிவாளோ அக்காரிகை என்று கேளாதீர்! காதலில் மலர்வது கவிதை! அப்பூங்கொடியோ, காதலின் உருவம்—காதலே, அவள்—என்றெல்லாம், கூறிக்களிப்பர்.

கதையோ, இந்தரசத்தோடு முடிந்துவிடவில்லை-வளருகிறது.

வாயில்காப்போன் வந்தான், வனிதையைக் கண்டான், ஆனால் கதவைத் திறக்கவில்லை. ஓடிச் சென்று 'சேதியை' தன், எஜமானியிடம் கூறினான்.

* * *

"எழிலுருவோ அவள்?"

"ஆ ! அழகின் எல்லை"

"அழுதுடித்து அழுகிறாளோ அவள்?"

"ஆமாம், கல்லும்கரையும் அக்கன்னியின் அழுகுரல் கேட்டால்"

"கதவுதிறமின் என்று கேட்டுநிற்கிறாள்"

"ஆம்! திறவாது போனால், உடைத்தெறிவேன் என்று சூள் உரைக்கிறாள் அந்த வாட்கண்ணி!"

"சூள் உரைத்தவளை, இந்நாள் என்ன செய்கிறேன்பார். காவலா! கதவுதிறவாதே!"

"கதறுகிறாளே!"

"அது எனக்குத் தேன்!"

"கதறுவதை நிறுத்திக்கொண்டு கதவு உடைக்க முனைந்தால்?"

"ஆமாம்! அதுபோலும் செய்யக்கூடும், அந்த ஆட்கொல்லி. ஒன்று செய். கதவுதிறந்து அவளை இங்கு அழைத்துவா, ஆனால், இங்கு, வழக்கமாக நாம் நடத்தும் மரியாதை முறைப்படி! துஷ்டச்சிறுக்கி உணரட்டும், நமது துரைத்தனத்தின் பெருமையை—ஆற்றலை அறியட்டும், அலைமோதும் மனம் கொண்ட அந்த அணங்கு"

* * *

காவலனும், எஜமானியும், பேசினர் இது போல். கதவைத்திறந்து, கதறிநின்ற காரிகையை, அந்தப் பிரம்மாண்டமான மாளிகைக்குள் அழைத்துவந்தான் காவலன். மையிருட்டு! பலவிதமான பறவைகள் அங்கு சிறகடித்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன. செவியைச்சிதைக்கும் விதமான கோரச் சத்தங்கள். எங்கும் புழுதி! எங்கும் துர்நாற்றம்! இந்த இடத்திலே, அழைத்துச் செல்லப்படுகிறாள், எழிலரசி. இவ்வளவையும் பொருட்படுத்தாமலேஅவள் செல்கிறாள், இருதயநாதன், அங்கு இருக்கிறான், காண்போம், பெறுவோம் என்ற நம்பிக்கையுடன்.

வழக்கமான மரியாதையுடன் அழைத்து வா, என்று கட்டளையிட்டிருந்தாலல்லவா, காவலனுக்கு. அவன்மீறி நடக்கமுடியாது. எனவே அரசி கூறியபடியே, அழகிக்கு மரியாதைகள் நடத்தினான்.

என்ன அந்த மரியாதை?

முதற் வாயற்படி புகுந்ததும், அழகியின், கிரீடம் பறிக்கப்பட்டது. இரண்டாம் வாசலில், காதணி போயிற்று, மூன்றாம் வாசலில் கழுத்தணி போயிற்று, நான்காம் வாயலில் நகை பல போயின, ஐந்தாம் வாயலில் இடுப்பணி பறித்தனர், -இவ்வளவுக்கும் அவள் சினம் கொள்ளவில்லை; இந்தச் சீரழிவுகள் ஏன் என்று வருந்தவுமில்லை, செல்! செல்! என் காதலன் இருக்குமிடம் அழைத்துச் செல்! என்றே கூவினாள். ஆறும் வாயலில்அந்தஆரணங்கின்ஆடையும் பறிக்கப்பட்டது. தோகையின் துகில் உரியப்பட்டது. ஏனோ இச்செயல் என்று கேட்டாள். என் செய்வேன் ஏந்திழையே! எமது அரசி அலாட்டுவின் ஆக்கினை இது, என்றான் காவலன்.

இழுத்துச் செல்லப்பட்டாள், மேலும் மேலும் — நெடுந்தூரம். கடைசியில் ஓர் கொலு மண்டபத்தின் முன்பு நிறுத்தப்பட்டாள். அங்கு வீற்றிருந்தாள், அலாட்டூ அரசி. கெம்பீரமாக அவள் எதிரே நின்றாள், ஆடையிழந்த அழகி!

"பங்கம் பல அடைந்தும் இவள் பெண் சிங்கமென நிற்பதைக் காணீர்!" என்று சுடுசொல் கூறினாள், அலாட்டூ அரசி.

"இவளை இவ்வளவு இம்சித்தது போதாது! காதலன் அல்லவா வேண்டும், காதலன்! தருகிறேன் இவளுக்குக் கடுமையான நோய்கள் அனைத்தையும்" என்று ஆர்ப்பரித்தார்.

நாம்டார், எனும் நோயூட்டும் தீயதேவனை அழைத்தாள்—இவளைத் தீண்டு, தேவனே! தேகமெங்கும், நோயை மூட்டிவிடு, என்று உத்தரவிட்டாள். நாம்டாரின் நாசமூட்டும் சக்தி, நங்கையின் உடலெங்கும் நோயை ஊட்டிற்று. அழகி, அழுகலானாள்.

ஆனால், அவளுக்கு வந்த அவதி, அவளோடு நின்றதோ! இல்லை! அவனியெங்கும் பரவிற்று. உற்பத்தியே, நின்றுவிட்டது.

* * *

எவ்வளவு எக்களிப்புக்கொள்வர், இவ்வளவு 'கதை' கிடைத்துவிட்டால்! வாயலுக்கு வாயல், அழகி செல்ல எவ்வளவு நேரம் பிடித்திருக்குமோ, அதுபோல் நூறு மடங்கு அதிக நேரம் பிடித்திருக்குமே, அருங்கவி வாணர்களுக்கு. 'கவிச் சக்ரவர்த்தி' கம்பரிடம், மட்டும், இந்தக் காரிகையின் கதை சிக்கிவிட்டிருந்தால், அந்த ஆறும் வாயற்படியைக் கடக்க, எவ்வளவு நேரம் பிடித்திருக்கும்! ஒரு நூறு செய்யுள் செய்து, அம்மவோ! அற்புதங்கொல்! காணற் கரிய காட்சியாமே! என்ற செருகல்களை வைத்து, இன்ப ரசத்தை இழைத்துக் குழைத்து, அரி அரப் பிரம்மாதியரே வந்து தடுப்பினும், இன்னுமோர் இருபது செய்யுளேனும் இயற்றாது விடின், இம்மை மறுமை இரண்டிலும் சுகம் இராது என்று கூறியிருந்திருப்பார். நல்ல வேளை, அந்த ஆடை இழந்த அணங்கு, கம்பரின் கருத்திலே தோன்றவில்லை.

* * *

இந்தக் கதையைத் தொடரு முன்பு, நண்பர்கள் யோசிக்க வேண்டும், சாவித்திரி, துரோபதை, எனும் இரு கற்பனைகளின், 'கூட்டு' போல, இக்கதை இருக்கிறதல்லவா, என்பதை.

* * *

நாதனைத் தேடிச்சென்ற நல்லாளுக்கு இப்பொல்லா நிலை வந்தது கண்டு, நானிலம் நடுங்கியது மட்டுமல்ல, கடவுளர்களும், கோபித்தனர்.

ஏனெனில், இவ்வளவு இம்சைக்கும் இழிவுக்கும் ஆளான ஆரணங்கு, வேறு யாரும் அல்ல, தேவலோகத்தின் ராணி!—பல கடவுள்களில் ஒருவள்!!

தேவலோக ராணிக்குத்தான் காதல் இப்படி! அவள்தான், காதலனைத் தேடி அலைகிறாள் பல இடங்களிலும். கடைசியில் அவள் சென்ற இடம், நரகலோகம். அந்த நரகலோக ராணிதான், அலாட்டூ. அவள்தான், தேவலோக ராணியைத் துகிலுரிந்து விட்டதுமன்றி, நோயையும் ஏவுகிறாள். ஏன்? தேவலோக ராணிமீது நரகலோக ராணிக்கு அவ்வளவு பொறாமை—கோபம்.

வஞ்சம் தீர்த்துக்கொண்டாள் இஷ்டார் எனும் பெயர் கொண்ட தேவலோக ராணிமீது.

பிறகு, இந்த அக்ரமத்தைப்பெரிய கடவுள்கள் அடக்கியதுடன், தேவலோக ராணியை நரகலோகத்திலிருந்து மீட்டனர்.

* * *

இந்தக் கற்பனை, எள்ளளவேனும் மட்டமா? நம் நாட்டுப்பழம் புராணங்கட்கு. எவர் கூறுவர்? இந்தப் புராணத்திலே, நமது கலாரசிகர்கள் தேடிடும் 'நவரசம்' ஏராளம். இதுவும் கடவுளின் கதைதான்—நரர் கதை அல்ல.

பாபிலோனியா நாட்டுப் புராணம் இது. தேவலோக ராணி இஷ்டார்; டாமூஜ் எனும் திவ்ய ரூபனிடம் காதல் கொண்டு, அவனை அடைய நரகலோகம் சென்று, அங்கு, வஞ்சனை மிக்க அலாட்டூ தேவதையால் அவமானப்படுத்தப்பட்டு, நோயூட்டப்பட்டு, நொந்து கிடக்க, இஷ்டாரை ரட்சித்து, அவளை, மூல தெய்வங்கள், மீட்ட புராணம்.

இஷ்டார், அலாட்டூ, டாமூஜ், இவையாவும், காவிய பாத்திரங்களாகமட்டும் இல்லை, கடவுள்கள்! கோயில் கட்டிக்கும்பிட்டு வந்தனர், பாபிலோனியா நாட்டுமக்கள். பூஜைகளுக்கும், புனிதத்தன்மைக்கும் குறைவு கிடையாது. இப்போது, இஷ்டாரும் இல்லை, டாமூஜும் இல்லை, இடர் செய்த அலாட்டாவும் இல்லை. இவர்களுக்காக எழுப்பப்பட்ட கோயில்களும் இல்லை, இவர்கள்பற்றிய பண்டிகை இல்லை, தேரும் திருவிழாவும் இல்லை, திருப்பாசுரம் இல்லை. — இவையாவும் மாஜிகளாயின!! இவைபோன்ற கற்பனைக் கடவுள்களை நம்பிக்கருத்தழியாதீர், என்று அறிஞர்கள் கூறினபோது, பாபிலோனிய மக்கள், எளிதிலே நம்பினரா? நம்புவாரா? எங்கள் மூதாதையரின்தெய்வங்களைப், புராண மகிமையைப், பூஜையின் புனிதத்தன்மையைக் குறை கூறுகிறாயே, ஏடா! மூடா! இது தகுமோடா! நீ நாசமாவாயடா! என்றுதான் சபித்தனர். ஆனால் அவர்களின் கோபம்தான் அடங்கிற்று, புத்தறிவின் வேகம் அடங்கவில்லை. இஷ்டாரும் அலாட்டாவும், பிறவும், அந்த நாட்டு மக்களின் கருத்தை விட்டகன்று, யாரேனும் கவனப்படுத்தினாலும், அது எங்கள் பழம் பழம் மூதாதையர் அறிவுக் குழப்பத்தின்போது உண்டானவை, என்று கேலியுடன்பேசும் நிலை பிறக்கும்வரை, புத்தறிவுப்பிரசாரம் ஓயவில்லை.

அங்கும், இங்குபோல், இத்தகு கதைகளை, அப்படியே பார்த்தால், அறிவுக்குப்புறம்பாகவேதான்தோன்றும். ஆனால் இஷ்டாரைச் சக்தியாகவும், டாமூஜ் எனும் தேவனை இன்பமாகவும், அலாட்டா தேவியைத் துன்பமாகவும், வைத்துக், கதையைப் பார்த்தால், ஆழ்ந்த கருத்து விளங்கும் என்றுகூடக் கூறிப்பார்த்தனர். ஆனால் இளைஞர்கள் சிரித்தனர்.

துன்பத்தைத்துடைத்து இன்பம் பெறச்சக்தியால் பெறமுடியும்என்ற தத்துவத்தை, சாதாரணமாகவே, நாங்கள்புரிந்துகொள்வோம், புராணிகரே! அதற்காக நீர், ஆறுவாயிலுள்ள அரண்மனைக்கு அழைத்துச் சென்று, எம் எதிரே ஆடை இழந்த அழகியை நிற்கவைத்து, கோரமுகத் தேவனைக்காட்டி, ஏன் கொடுமைப்

(20-ம் பக்கம் பார்க்க)

## நியூட்டன்

19-ம் பக்கத் தொடர்ச்சி

தப்பட்டது. அச்சங்கத்தில் ஒருவன் அங்கத்தினனென்றால் பெருத்த மதிப்பு அக்காலத்தில், ஏன் இக்காலத்திலும் கூடத்தான்!

நியூட்டன் அச்சங்கத்தில் சேர்ந்த பிறகு அவன் கண்டுபிடித்து வைத்திருந்த ஒளியைப் பற்றிய செய்திகளைச் சங்கத்திற்கு அனுப்பிவைத்தான். அச்சங்கத்தின் முக்கியமானவனும், மிகுந்த செல்வாக்குமிருந்த ஹூக் என்ற விஞ்ஞானி, அவற்றைக் கண்டு பொறாமை கொண்டு, நியூட்டன் எழுதியதைப் பிரசுரிக்காமலேயே வைத்திருந்தான்.

ஹூக்பொறாமையே உருவெடுத்த வஞ்சகன். பிறர் நல்ல பெயர் வாங்குவதையோ, வாழ்வில் உயர்வதையோ கண்டு சகிக்காத உள்ளம் படைத்த கசடன். எவ்வளவு திறமை மிக்கவராக இருந்தாலும், அச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டால் அவர்களை எப்படி அழுத்தலாம், ஒழிக்கலாம் என்பவைபோன்ற கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்டவன்.

யாராவது புதிததாக ஒன்று கண்டுபிடித்ததாக அவனிடம் வந்து சொன்னால், "தூ!! இதுவா? பல வருஷங்களுக்கு முன்பே நான் இதனைக் கண்டுபிடித்து விட்டேனே! இதை நீங்கள் இப்பொழுதுதானா அறிந்துகொண்டீர்கள்!" என்று கூறிப், புதிய ஆராய்ச்சியை வெளியிடாமல் தடுத்துவிடுவான். வஞ்சகமும் கீழ்ச்செயலும், பாலும் பழமும் அவனுக்கு!

ஹூக் செய்துவந்த அடாத செயலைத் தெரிந்தும், நியூட்டன் மேலும் மேலும் தான் கண்டுபிடித்தவைகளை அனுப்பிக்கொண்டேயிருந்தான். புதிய ஆராய்ச்சிகளும் பழைய கதியையே அடைந்தன!

அதன் பிறகுதான், பிற்காலத்தில் அவைகள் வெளிவந்தால் போதுமென்றெண்ணி, நியூட்டன், சங்கத்திற்குத் தன் ஆராய்ச்சிகளை அனுப்புவதை நிறுத்திக்கொண்டான்.

ஹூக் இறந்த பிறகு, தான் கண்டுபிடித்த ஆராய்ச்சிகளை ஒன்றாகத் திரட்டி 'பிரின்ஸிபியா' (Principia) என்ற பெயரிட்டு, 1689-ஆம் ஆண்டு 200 பிரதிகள் அச்சிட்டு வெளியிட்டான். அந்த நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவர இருபத்தாறு ஆண்டுகள் ஆயின! பஞ்சாங்கங்கள் விற்பனையாகும் அளவிற்கு, அறிவியல் நூல்கள் விற்பனையாவதில்லை என்ற உண்மை அனைவரும் அறிந்ததுதானே?

நியூட்டனின் பெயர் உலகில் அழியாமல் நிலைத்திருக்கக் காரணம், அந்த நூல்தான். வானத்திலிருக்கும் கோளங்களின் போக்கைக் கணக்கிட முதன்முதல் பயன்பட்டது அந்த நூல்தான். சூரியன், சந்திரன், மற்றும் பல கிரகங்கள் இன்ன காலத்தில் இன்ன இடத்திலிருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, முன்னதாகவே கூற "பிரின்ஸிபியா" மிகவும் பயன்பட்டது.

அலைகடலில் கப்பலோட்டிச் செல்லும் மாலுமிகள் உபயோகிக்கும் திசைகாட்டியின் அடிப்படையைக் கண்டுபிடித்தவன் நியூட்டன்தான்.

அலைகள் கடலில் உண்டாகுவதின் காரணத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவனும் நியூட்டன்தான். சூரிய சந்திரர்களின் இழுக்கும் சக்தியினால் கடலில் அலை உண்டாகிறது என்ற உண்மையை அதற்கு முன்பு யாரும் அறியார்.

பூமி உருண்டையாயில்லாமல், துருவங்களுக் கருகே தட்டையாகவும், பூமத்திய ரேகைக்கருகே பருத்தும், ஆரஞ்சுப்பழத்தைப்போலிருப்பதின் காரணத்தை விளக்கியவன் நியூட்டன்தான்!

நியூட்டன் சில குறிப்பிட்ட முக்கியமான வேலைகளுக்குத்தான் வெளியூர்களுக்குச் செல்வதுவழக்கம். எப்பொழுதும் வீட்டின் உள்ளிருந்தோ அல்லது தோட்டத்தில் உலாவிக்கொண்டோ சிந்தித்த வண்ணமிருப்பான்.

அவன் பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டான். குள்ளமான உருவம். ஆனால் நல்ல கட்டுமஸ்தான தேகம்! ஐம்பது வயதாகியும் அவனது தலைமயிர் ஒன்றுகூட நரைக்கவேயில்லை. கடைசி வரைக்கும் அவன் கண்கள் நல்ல நிலையிலேதான் இருந்தன. சிறு சிறு எழுத்துக்களையும் மூக்குக் கண்ணாடியில்லாமலேயே படிப்பான்!

நியூட்டன் தன் நூல் நிலயத்தில், முக்கியமான புத்தகங்களாகச் சுமார் இரண்டாயித்திற்குமேல் வைத்திருந்தான். விஞ்ஞான நூல்களும், கிரேக், லத்தின் ஆகிய இரு மொழியிலுமிருந்த சிறந்த இலக்கிய நூல்களும் அந்த நூல் நிலையத்திலிருந்தன.

அவன் கேம்பிரிட்ஜ் "டய்மண்ட்" (Diamond) என்ற நாயை மிகவும் அன்போடு வளர்த்து வந்தான். ஓர் இரவு மேஜையின்மேல் மெழுகு வத்தியை ஏற்றிவைத்துவிட்டு, நாயையும் அறையினுள் விட்டுவிட்டு, கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்றுவிட்டான்.

மேஜையின் மேல் அவன் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்த ஆராய்ச்சிகள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் இருந்தன! நாய், மேஜையின்மேல் ஏறி, மெழுகுவத்தியைத் தள்ளிவிட்டது. நெருப்புப்பட்டு, அந்தக் காகிதக் கத்தை முழுவதும் தீக்கு இரையாயின!

அறைக்குத் திரும்பிவந்து, தன் அறிவுக் களஞ்சியம் அவ்வளவும் தீயில் பொசுக்குண்டு, பிடிசாம்பலானதைக்கண்ட பிறகும்மனம் பதட்டமடையாமலும், நாயை அடிக்காமலும் சாந்தமாகவே நாயைத்தடவிக் கொடுத்தான். சாந்தமாக இருந்தானே ஒழிய, உண்மையில் அவன் சஞ்சலமடைந்தான். அப்பொழுது அவனைக்கண்டு மகிழ்ந்த நாயைப் பார்த்து, "டய்மண்ட்! டய்மண்ட்! உன் குறும்பை நீ சிறிதும் உணரவில்லையே!" என்று மெதுவாககூறினானாம், ஐம்பதுவயதான நியூட்டன்.

'பிரின்சிபியா' வெளிபிட்ட பிறகு நியூட்டன் அரசியலிலும் பங்கெடுத்துக் கொண்டான். சர்வகலாசாலைத் தொகுதிக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டு, 1689 ஆம் ஆண்டு பாராளும் மன்றத்தில் அங்கத்தினனாக அமர்ந்தான். அவனுக்கு அதிகமாகப் பேசத்தெரியாது. பாராளும் மன்றத்தில் அவன் பேசும் வழக்கமே கிடையாது! ஆனால் ஒரே ஒரு முறைமட்டும் பேச எழுந்தான்! அனைவரும் ஆச்சரியத்தோடு அவனை நோக்கினார்கள்! எழுந்த நியூட்டன் கையைக்காட்டி, "வேலைக்காரனைக் கூப்பிட்டு இந்தக் கதவை மூடும்படி சொல்லுங்கள்!" என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டான்! ஒரே ஒரு நாள் மட்டும் அவன் தைரியமாகப் பேசிய பேச்சு இதுதான்!

லண்டன் நகரில் இருந்த நியூட்டன், அவன் அன்னை நோய் வாய்ப்பட்டு வருந்துவதாகச் செய்தி கிடைத்ததும், தன் ஊருக்குச் சென்று அவனைக் கவனித்து வரலா

னன். சில தினங்களில் அன்னை இறந்துவிடவே, துக்கத்தில் ஆழ்ந்தான்.

அன்னையின் பிரிவை அவனால் சுலபத்தில் மறக்க முடியவில்லை. கவலையில் சிக்கிய நியூட்டன், 1693 ஆம் ஆண்டு கொடிய நோய்க்காளானான். அந்த நோய், அவன் மூளையையும் பாதித்தது. "நான்நோயினால்கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறேன். மூளையும் முன்போல வேலை செய்ய மறுக்கிறது. சென்ற ஓர் ஆண்டாகச் சரியாகச் சாப்பிடுவதுமில்லை, தூங்குவதுமில்லை! மனம் ஒரு நிலையில் இல்லை" என்று அப்பொழுது ஒரு தோழனுக்கு நியூட்டன் கடிதமெழுதினான்.

1694 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தான் அந்தக்கொடியநோயினின்றும் விடுதலையடைந்தான். அவனது விஞ்ஞான நண்பனொருவன் எழுதிய கடிதத்தில், நியூட்டனுக்கு மூளைக் கோளாறு எற்பட்டிருந்ததென்று எழுதிவிட்டு, "சிகிச்சை பல நாள் செய்த பிறகு, வெகு நாட்களுக்குப் பின்னர், தன்னுடைய பிரின்ஸிபியாவைப் புரிந்துகொள்ளக் கூடிய அளவிற்குக் குணமடைந்திருக்கிறார்!" என்று குறிப்பிட்டிருக்கிறான். தான் எழுதிய நூலையேபுரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவனது மூளை, அந்தக் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டது!

அந்த நோயின் காரணமாக அவனது பிற்கால வாழ்க்கை மிகவும் வேதனை நிறைந்ததாக ஆகிவிட்டது. மனமும் சோர்வடைந்தது. பழைய உற்சாகமும் ஆர்வமும் குறைந்தன. கடைசியாகச் சில ஆண்டுகளுக்குப் பிறகு தன் ஆசிரியர் வேலையைவிட்டு விட்டான்.

ஓய்வு பெற்ற நியூட்டனை, நாணயம் அச்சடிக்கும் சாலையில் உத்தியோகம் ஏற்க அழைக்கவே, அந்த அழைப்பிற்கிணங்கி உத்தியோகத்திற்குச் சென்றான். அந்த வேலைக்கு அவன் செல்வதை யாரும் விரும்பவில்லை.

அவனது இரசாயன அறிவு, தங்கம் வெள்ளி ஆகியவற்றைச் சுத்தம் செய்யப் பயன்பட்டது. சில ஆண்டுகளில் அச்சாலையின் தலைமை அதிகாரியானான். அங்கிருந்துகொண்டே ராயல் சொசைட்டியின் அங்கத்தினன் பதவியை வகித்து வந்தான். 1703 ஆம் ஆண்டு அச்சங்கத்தின் தலைவனானான்.

பல ஆண்டுகளுக்கு முன் வந்திருக்க வேண்டிய அவனது ஒளியைப் பற்றிய ஆராய்ச்சி நூல் 1704-ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டு வந்த ஆன் அரசி (Queen anne) 1705-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினாறும் தேதி, "ஸர்" பட்டமளித்து, நியூட்டனைப் பாராட்டினாள்!

வயது ஆகஆக நியூட்டனின் உடல் நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. வைத்தியரின் யோசனையின்படி நியூட்டன் தன் கிராமத்தில் அமைதியாக ஓய்வெடுத்து வந்தான். அவசியமான நேரங்களில் ராயல் சொசைட்டியின் கூட்டங்களுக்கு மட்டும் போய்க்கொண்டிருந்தான்.

1727ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒரு நாள், சங்கத்தின் கூட்டத்திற்குச் சென்று திரும்பியதால் அவன் உடல் நிலை மோசமாயிற்று. மூன்று நாட்கள் கழித்து மார்ச்சு மாதம் 20ம் தேதி, தன் எண்பத்தைந்தாவது வயதில் உயிர்விட்டான் நிபுணன் நியூட்டன். அறிஞன் நியூட்டனின் உடல் வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் (West minister abbey) அடக்கம் செய்யப்பட்டது.

நிபுணன் நியூட்டன் உயிர் விட்டானென்பதை அறிந்த ஆங்கில மக்களும், விஞ்ஞானிகளும், கண்ணீர் விட்டு, கவலையில் ஆழ்ந்தார்கள். நியூட்டனைப் பின்பற்றி உழைத்தார்கள், உழைக்கிறார்கள். பல நியூட்டன்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றனர் அங்கு!

ஆனால் நம் நாட்டில், வீணர்கள் தோன்றுகிறார்களே ஒழிய விஞ்ஞானிகள் தோன்றுவது கிடையாது. அப்படி யாராவது தோன்ற ஆரம்பித்தாலும், பொறாமை என்ற வாள் கொண்டு வெட்டி வீழ்த்தி விடுகிறார்கள். இந்தக்கீழ்நிலைமாறி, பொறாமை என்ற வாளை எறிந்துவிட்டு, அன்பும் ஆதரவும் தந்து, என்று இங்கு தோன்றும் நியூட்டன்களைப் போற்றி வளர்க்கிறார்களோ, அன்றுதான் இந்நாடு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாகும்!

15-ம் பக்கத் தொடர்ச்சி

ளார். நேரிலும் வற்புறுத்த இங்கிலாந்திற்குச்சட்டநிபுணரை அனுப்பியுள்ளார்.

எலிஜிபெத் இளவரசி மணத்திற்கு, மணிப்பூர் மன்னர் தந்த மரியாதைகளுடன், மன்னரின் நோக்கத்தையும் அறிவிக்கஅந்நிபுணர் இங்கிலாந்து சென்றுள்ளார். மணிப்பூர் சமஸ்தானம், இந்தியயூனியனில் இணைந்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இது விஷயமாகப் பர்மா கொள்ளும் கருத்தைப் பொருத்திருக்கிறது, மணிப்பூர் மன்னரின் கோரிக்கை நிறைவேறுவது. ஏகாதிபத்தியம் நீங்கின பின்னரும், இங்கு மக்கள் நல்ல முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாதநிலையில் எத்தனை எத்தனை புதிய சிக்கல்களும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. சொந்த லாபத்தையே பெரிதாகக் கருதி, ஏகாதிபத்தியம் ஆட்சி செலுத்தினதால் தான் இவ்விளைவு இருக்கிறது. இனியும் ஆட்சியிலுள்ளோர் ஏகாதிபத்தியம் கையாண்ட முறையை மேற்கொள்ளாது, முரண்பட்ட பழக்க வழக்கங்களை உடைய மக்களை ஒரே பட்டியில் அடைக்காது, அந்தந்த மக்கள் விருப்பப்படி நடந்து கொள்வதே சிக்கல் தீர்க்கும் சிறந்த மார்க்கமாகும். நாட்டு விஸ்தரிப்பில் நாட்டம் இருப்பதைக் காட்டிலும், நல்லாட்சி அமைப்பதிலும், பஞ்சம் பட்டினியை நீக்குவதிலும் கவனம் செலுத்துவது, இது சமயத்தில் மிக மிக முக்கியமாகும்.

## நமது நாட்களில்

திருவனந்தபுரத்தருகே மூழக்குலம் என்ற ஊரில், 80-வயது நம்பூதிரி (மலையாளப்பார்ப்பனர்) 20-வயதுப் பெண்ணை நவம்பர் 12-ந்தேதி மணம் செய்துகொண்டார். இவ்விதமான சமூக அக்ரமம் நேராதபடி பிரசாரம் செய்யும் யோகக்ஷேமசபா எனும் கழகத்தினர், இத்தக்கலியாணத்தைத் தடுக்க முயற்சித்தனர். ஆனால், கிழமாப்பிள்ளை போலீஸ் உதவியுடன், திருமணத்தை முடித்துக் கொண்டார்.

# ★ ஆசிரியர் சிந்தனைக்கும் மாணவர் விழிப்புக்கும் ★

[நக்கீரன்]

"போ வெளியே! இங்கு ஒரு விநாடிகூட இருத்தல் கூடாது!"

"சுவாமி! அடியேன் செய்த தவறு யாது?"

"தவறு யாதென்றா கேட்கிறாய்! என்னுடைய பூந்தோட்டத்துக்கு மலர் கொய்வதற்காகச் சென்ற நீ, எனது மனைவியாரின் பூங்காவில் மலர்பறித்துக்கொண்டு நின்ற பெண்களைப் பார்த்துக் காமுற்றது தவறில்லையா?"

"அறியாது செய்து விட்டேன் ஆண்டவனே! பொறுத்தருள்க."

"நீ செய்த இந்த அடாத செயல் எனக்குமன்றோ இழுக்கைத் தருவதாக இருக்கின்றது!"

"அடியேன் செய்த இக்கொடிய பிழை, ஆண்டவனாகிய தங்களுக்கு எவ்வாறு இழுக்கை உண்டாக்கும்?"

"என்னுடைய மறுவடிவ (பிரதிபிம்ப) மல்லவா நீ!"

"அடியேன் தங்களுடைய மறுவடிவமா? எப்படி!"

"அன்றொரு நாள், நான், எனது அழகுறு தமனிய மண்டபத்தின்கண் பதிக்கப்பெற்றுள்ள நிலைக்கண்ணாடியொன்றில் எனதுவடிவத்தைப் பார்த்தேன்; அவ்வடிவம், தனக்கு ஒப்பதும் மிக்கதும் அற்ற ஒரு சிறந்த தனி அழகுடையதாகத் தோன்றிற்று; அவ்வழகைக் கண்டயான் (எந்தப் பொருளிடத்தும் விருப்பு வெறுப்பற்ற யான்) அதன்பால் அளவற்ற விருப்பம் கொண்டு, 'சுந்தரா, இங்கே வா' என்றழைத்தேன்; உடனே அவ்வழகு வடிவம் உயிர் பெற்று என் பக்கத்தில் வந்து நின்றது; அந்த வடிவமே நீ. அப்படிப்பட்ட 'நானே நீ, நீயே நானு'க அமைந்த நீ இந்தத் தகாத செயலைச் செய்தால், அது, எனக்கும் இழுக்கைத் தருவதாகாதா?"

"அப்படியா சுவாமி! உண்மையை உணர்ந்தேன். தங்களுடைய மறுவடிவமே நான்என்பது உண்மையானால், தங்களில் வேறுபடாத யான், தங்களை நீக்கி இந்தக் குற்றத்தை எப்படிச் செய்திருக்க முடியும்? இக்குற்றத்தில் தங்களுக்கும் சரியொத்த பங்கு இருக்கவேண்டுமே!"

"முட்டாளே, அப்படியன்று! வடிவம் மட்டுமே என்னுடையது; உயிர் என்னுடையதன்று."

"அப்படியானால், அந்த வடிவத்துக்கு உயிர் எப்படி வந்தது?"

"வடிவத்தை உண்டாக்கிய நானே, அதற்கு உயிரையும் கொடுத்தேன்."

வடிவம் தங்களுடையதென்பதைத் தாங்கள் சொல்ல அறிந்தேன்; ஆனால், அந்த வடிவத்துக்கு ஏற்பட்ட உயிர் யாருடையதென்பது தெரியவில்லையே!

"ஒரு வடிவம் உண்டாகும்போது, அதற்கு உயிரும் உண்டாகியே தீரும்."

"உண்மை, ஒரு வடிவம் உண்டாகும்போது, அதற்கு ஒரு உயிரும் உண்டாகியே தீரும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், உயிரோடு கூடிய ஒரு வடிவம் உண்டாகும் முறைக்கும் தங்களுடைய முறைக்கும் மிகப் பெரிய வேறுபாடு காணப்படுகின்றதே! உயிரோடு கூடிய ஒரு வடிவம் உண்டாகவேண்டுமானால், ஒருஆண்ஒரு பெண்ணோடு கூடி, அப்பெண்ணின் கருப்பையில் உருவாகி, உறுப்புகள் உண்டாகி, உரிய பருவத்தில் உயிர் பெற்றுப் பிறப்பதையே உயிரோடு கூடிய வடிவம், அதாவது மக்கள் பிறக்கும் முறையென்று சொல்லப்படுகிறதே!"

"மக்கள், உயிரோடு கூடிய வடிவத்தை உண்டாக்கும் முறை வேறு; கடவுளாகிய யான் செய்யும் முறை வேறு."

"அப்படியானால், உயிரோடுகூடிய வடிவத்தை உண்டாக்குவதில் இரண்டு முறைகள் வெவ்வேறு விதமாக இருப்பானேன்? அதிலும் ஒன்று மிக எளிதாகவும், இன்னொன்று மிக மிகக் கடினமாகவும் இருக்கும்படி செய்வானேன்? தாங்களோ, நினைத்தவுடனேயே ஒரு வடிவத்தையும் அதற்கு ஒரு உயிரையும் உண்டாக்கி விடுகிறீர்கள்! மக்களும் பிற விலங்கு பறவை முதலியனவும் ஒரு உயிரோடு கூடிய வடிவத்தைப் பெற்றெடுப்பதில் எத்துணைத் தொல்லையும் துன்பமும் படுகிறார்கள்!"

"இதனால்தான் நான் வேறு, மக்களும் பிற உயிர்களும் வேறென்றும், நானே அனைத்திற்கும் மேலான பெரும் பொருளென்றும் ஏற்படுகின்றது."

"தாங்களே அனைத்திற்கும் மேலான பெரும் பரம்பொருள் என்பதும், தாங்கள் உயிரோடு கூடிய ஒரு வடிவத்தை உண்டாக்குவதில் கையாளப்படும்முறைவேறென்பதும் உண்மையானால், தாங்கள், தங்களுடைய மூத்த புதல்வரான பிள்ளையாரைப் பெற்றெடுப்பதற்காக ஒரு ஆண் யானையாகவும், தங்களுடைய பிராட்டியாரை ஒரு பெண்யானையாகவும் வடிவெடுக்கும்படி செய்து, மக்களும் பிற உயிர்களும் மேற்கொள்ளும் முறையைத், தாங்கள் கையாண்டதேன்?"

"அதுவா? உலகிலுள்ள எல்லா உயிர்களைப் பார்க்கிலும், ஆண்யானையுடையவும் பெண்யானையுடையவும் சேர்க்கையே நீண்டநேரம் நிலைத்திருந்து இன்பம் தரவல்லதாகையால், அத்தகைய நீண்டநேர இன்ப நுகர்ச்சியை விரும்பிய நானும் அவ்வாறு செய்தேன்; இதில் என்ன தவறு?"

"எதிலும் விருப்போ வெறுப்போ அற்ற பெருந்தகைப் பெரும் பொருளாகிய தங்களுக்கே இத்தகைய கட்டுக்கடங்காத வேட்கை ஏற்பட்டதென்றால், தங்களுடைய வடிவத்தையே பெற்ற எனக்கு ஏற்பட்ட இயல்பான வேட்கையைக் குற்றமாகக் கொள்ளலாமா சுவாமி!"

"நான் அதனைக் குற்றமென்று கூறவில்லையே!"

"அது குற்றமல்லவென்றால், என்னை ஏன் பூலோகத்துக்குப் போகும்படி துரத்துகிறீர்கள்?"

"பூலோகம்தான் இத்தகைய சிற்றின்பங்களை நுகர்வதற்கு ஏற்ற இடம்; கைலாயம் பேரின்ப நுகர்ச்சிக்குரிய இடம்."

"அப்படியானால் தாங்களும் பிள்ளையாரை............"

"ஆமாம்! நானும் பூலோகத்துக்குப் போய்த்தான் அங்குள்ள ஒரு காட்டிலே, யானை வடிவம் கொண்டு பிள்ளையாரைப் பெற்றெடுத்தேன். நான் மட்டும் என்ன! இந்திரன் கூடப் பூலோகத்துக்குப் போய்த்தான் அகலிகையை..............."

"ஆமாம், இப்பொழுதுதான் என்

நினைவுக்கு வருகிறது, ஒருமுறை தாங்கள்கூடப் பூலோகத்துக்குப் போய்த்தான், இயற்பகை என்பவரின் மனைவியைத் தங்களுக்கு மனைவியாக்கித் தரும்படி கேட்டீர்களாம்."

"அது மட்டுமல்ல, எனக்கு என்னென்ன தேவைப்படுகிறதோ, என்னென்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறேனோ, அவற்றிற்கெல்லாம் நான் பூலோகத்துக்குப் போவது தான் வழக்கம்; அங்குதான் அவை எல்லாம் கிடைக்கும் — செய்ய முடியும்."

"அப்படியானால், தாங்கள் ஒரு முறை, கைலாயத்தில் இருந்து கொண்டே பலகோடி ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் பிராட்டியாரோடு இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டிருந்ததாகச் சொல்லுகிறார்களே!"

"உண்மைதான்; அப்படிப்பட்ட இயற்கையோடு ஒத்துவராத காரியங்களைச் செய்வதற்காகத்தான், கைலாயமென்பதாக ஒன்றை உண்டாக்கிக்கொண்டு, நானும் எனது தோழர்களான தேவர்களும், திலோர்த்தமை, ஊர்வசி, அரம்பை முதலான மாதர் திலகங்களும் இங்கு தங்கியிருக்கிறோம்."

"இப்போதுதான் எனக்கு உண்மை விளங்கிற்று; இவ்வளவு நேரம் தங்களுக்குத் தொந்தரவு கொடுத்தமைக்குப் பொறுத்தருள்க."

"என்னைப்பற்றியும், என்னுடைய திருவிளையாடல்கள் பற்றியுமுள்ள உண்மைகளை எவரும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியாது; ஏதோ நீ என்னுடைய மறுவடிவமாகும் வாய்ப்புப் பெற்றதால், இவ்வளவு விரைவாகவும் எளிதாகவும் என்னை உணர முடிந்தது."

"தேவரீருடைய பேருதவிக்கு அடியேனுடைய தாழ்மையான வணக்கம்; நான் போகட்டுங்களா பூலோகத்துக்கு?"

"அப்படியே! அங்கு சென்று உன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொண்டு, மறுபடியும் என்னிடமே வந்து சேரக்கடவாய்; போய் வா."

"சுவாமி! ஒன்று மறந்துவிட்டேன்."

"என்ன அது?"

"நான் இச்சித்த கமலினியும், அனிந்திதையும்..............."

"அவர்களை அப்பொழுதே அம்பிகையிடம் சொல்லிப் பூலோகத்துக்கு அனுப்பும்படி செய்துவிட்டேன்; போய் வா."

"சுவாமி! இன்னொன்று; மிக இன்றியமையாதது; அதை இந்த அவசரத்தில் அடியோடு மறந்தே விட்டேனே!"

"அப்படி இன்றியமையாத எதனை மறந்துவிட்டாய்?"

"அடியேன் பூலோகத்துக்குச் சென்று, அவ்வுலக வாழ்க்கையிலே செய்யவேண்டியது இன்னது, நீக்க வேண்டியது இன்னது என்று அறியாது மயங்கும் போது தேவரீர் வந்து அடியேனைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டும்; இதுவே என்னுடைய வேண்டுகோள்."

"அப்படியே செய்கிறேன்; அஞ்சாதே; போய்வா."

* * *

இவ்விதமான ஒரு உரையாடல் யார் யாரால்—எங்கு—எப்பொழுது நடந்ததென்று கேட்கிறீர்களா? ஆலாலசுந்தரருக்கும் ஆண்டவனுக்கும், கைலாயத்திலே, ஆண்டவன் ஆலாலசுந்தரரை அவனிக்கு அனுப்பிய சமயம் நடைபெற்ற உரையாடலே நாம் மேலே குறிப்பிட்டிருப்பது. உரையாடல், கற்பனையாக இருந்தபோதிலும், பெரிய புராணத்தில் சொல்லப்படும் தடுத்தாட்கொண்ட திருவிளையாடலைப் பற்றிய நிகழ்ச்சி உண்மையாக இருக்குமானால், நான் மேலே தீட்டியுள்ளபடிதான் உரையாடல் இருந்திருக்கும் — இருக்கமுடியும் — இருக்கவேண்டும்.

சிவனாரின் கட்டளையின்படிபூலோகத்துக்கு வந்த ஆலால சுந்தரர், திருநாவலூரிலே சடையனார் என்னும் பார்ப்பனருக்கு, அவர் மனைவியாரான இசை ஞானியார் வயிற்றில் கருத்தரித்துப் பிறந்து, நம்பியாரூரர் எனப்பெயர் சூட்டப்பெற்றுத், திருமுனைப்பாடி நாட்டு மன்னனை நரசிங்கமுனையர் என்பவரால் வளர்க்கப் பெற்றாரென்று சொல்லப்படுகின்றது. கைலாயத்தில் இருந்த ஆலால சுந்தரர் சிவனாரின் கட்டளை பிறந்தவுடனே, பூலோகத்துக்கு எப்படி வந்தார் என்பதற்குப் புராணத்தில் விளக்கமில்லை. ஆலால சுந்தரர், மற்றை உயிர்களைப் போலும் இவ்வுலகிலே யோனிவழிப் பிறந்து, நல்வினை தீவினைகளைச் செய்து, அவற்றிற்கேற்ப வெவ்வேறு உலகங்களிற் சென்று, அந்தந்த வினைப்பயன்களை, அந்தந்த உலகிலேயிருந்து நுகர்ந்து, மீண்டும் இவ்வுலகில் வந்து பிறந்து, மறுபடியும் எஞ்சிநிற்கும் வினைகளை நுகர்ந்து முடிப்பதற்காக வேறுபல பிறப்புக்களை எடுத்துப் பிறந்துழலும் பலர்கள் போலன்றிச், சிவஉலகத்திலேயே — சிவனுடைய விருப்பத்திற்கே—சிவனுடைய வடிவமாக—அங்குள்ள கண்ணாடியினின்றும் பிறந்தவராயிற்றே! ஆணவம்—மாயை—கன்மம் என்று சொல்லப்படும் மும்மலங்களும், இருப்புவினை (சஞ்சிதம்) நுகர்வினை (பிராரத்தம்) நிகழ்வினை (ஆகாமியம்) என்று சொல்லப்படும் மூவினைகளும் ஆலால சுந்தரருக்கு உண்டென்று சொல்வதற்கில்லையே! சுந்தரருக்கு இவை உண்டென்றால், சுந்தரரின் வேறுபடாத சிவனுக்கும் இவை உண்டென்பது பெறப்படும். படவே, சிவனை முழுமுதற் பெருங்கடவுள் என்பார் கொள்கை கழுத்திற் கைபிடித்துத்தள்ளி ஒதுக்கப்படும் நிலைமை உண்டாக்கிச், சைவஅன்பர்களின் மனதைப் புண்படுத்துமாகையால், ஆலாலசுந்தரர் எப்படிப் பூலோகத்துக்கு வந்தார் என்பது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடாமல், அவர் தடுத்தாட் கொள்ளப்பட்ட பகுதியை மட்டுமே இங்கு ஆராய்வாம்.

சுந்தரருக்குத் திருமணம் செய்து கொள்ளும் பருவம் வந்தவுடனே, அவரது பெற்றோர், அவர்கள் இனத்தில் ஒரு பெண்ணைப் பார்த்துப், பெண்ணின் பெற்றோர்களின் உடன்பாட்டையும் பெற்றுத் திருமணத்துக்குநாளும் குறிக்கப்பட்டு, மணப் பந்தரில் மாப்பிள்ளை உட்கார்ந்திருக்கிறார். அந்தச் சமயத்தில் தான் சிவன் அவரைத் தடுத்தாட்கொள்ள வருகின்றார். எப்படி வருகின்றார்? ஒரு முதிய பார்ப்பன வடிவந்தாங்கித், தண்டூன்றித் தள்ளாடி நடந்து கொண்டே திருமணப் பந்தருக்குள் நுழைகின்றார். நுழைந்து அங்குள்ளவர்களை நோக்கிச் "சபையோரே என் மொழி கேளுங்கள், இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமை; இதுவே என் முறையீடு" என்றார். அதுகேட்ட அனைவரும் நகைத்துப், பார்ப்பனருக்குப் பார்ப்பனர் அடிமையாகும் வழக்கம் இல்லையே என்றனர். நம்பியாரூரர், "இவருக்

(13-ம் பக்கத்தில்)

# அவசர முடிவு!

உணவுக்கட்டுப் பாட்டை எடுத்து விடுவது என்று இந்திய சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் அதற்கான உத்தரவு வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

“என்னகவர்மெண்டு சார் இது! இதைஎல்லாம் கன்ட்ரோல் செய்யாமல், நடப்பது நடக்கட்டும் என்று விட்டுவிட்டால், நல்லதா? அவனவன், அவனவன் இஷ்டப்படி, அகப்பட்டதை அமுக்கி வைத்துக்கொண்டால், இல்லாதவன் என்ன செய்ய முடியும்? கவர்மெண்டுதானே, இதை எல்லாம் கவனித்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் கன்ட்ரோல் செய்யவேண்டும்?” என்று மக்கள்தான் பேசினர்-இப்போதும், ஏதேனும் பண்டம், கிடைக்காத நேரத்தில் இதையே பேசுகின்றனர்.

“பாழாய்ப்போன கன்ட்ரோல் தான் இருக்கே—காற்றுக்கும் தண்ணீருக்கும் தவிர மற்ற எல்லாவற்றுக்கும். எதைக்கேளு,கன்ட்ரோல்!- எதைத்தேடு, கன்ட்ரோல்—என்று சொல்லித் தொலைக்கிறார்களே—ஒரு சாமானை, நம்ம இஷ்டப்படி கடை வீதி சென்று, வாங்கி வருகிறோம் என்கிற ஆசை இல்லையே. எப்போது தான் தொலையுமோ இந்தக் கன்ட்ரோல்!” என்று அதே மக்கள் பேசுகிறார்கள்.

இரண்டுவிதமாகப்பேசும்போதும், பொதுமக்கள்தங்கள்வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள், தட்டுமுட்டின்றித், தாறுமாறாக விலை ஏறிப்போகாத நிலையில், தேவைப்படும் அளவுக்குக் கிடைக்கவேண்டும், என்ற ஆசையினால்தான் பேசுகிறார்கள்.

மக்களுக்கு, வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களைப் பெற வேண்டும் என்று கேட்கும் உரிமையும், அவை கிடைக்கும்படி செய்ய வேண்டியபொறுப்பு சர்க்காருக்கும் இருக்கிறது.

எனவே, மக்கள், கன்ட்ரோல் சம்பந்தமாகப் பேசுவதிலே, முறண்பட்ட கருத்துத் தொனித்தாலும், அது, கெட்ட நினைப்பின் விளைவாகவோ, இலாப வேட்டைச் சதியாகவோ இருக்க முடியாது.

கன்ட்ரோல் வேண்டும் என்று, பொதுமக்கள் பேசினர்—அவர்களே இன்று, கன்ட்ரோல் வேண்டாம் என்கிறார்கள்—ஆனால் பண்டம் சரிவரக் கிடைக்காதது தெரிந்தால், அவர்களே மீண்டும் கன்ட்ரோல் வேண்டுமென்று கூறுவர்.

ஆனால் இந்தச் சுருதி மாறி வருவதற்குள், இடையிலே, இடையூறு ஏற்படுமானால், என்ன செய்வது.?

மோட்டாருக்குள்ள கன்ட்ரோல், மேலுமினுக்கிப் பொருள்களுக்குள்ள கன்ட்ரோல், இவை சம்பந்தமாக, எடுக்கப்படும் நடவடிக்கைகளினால், சாதக பாதகம், பொது மக்களில் பெரும்பாலான மக்களைப் பாதிக்காது.

ஆனால் உணவு விஷயமாக கன்ட்ரோல் பிரச்னையிலே, எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை, தவறாக இருக்குமானால், வங்கம் ஏற்படக்கூடும்.

எனவே, உணவுப் பிரச்னையிலே வெறும் யூகம்—காகிதப் புள்ளி விவரம்—கற்பனைக்காட்சி—இவைகளையே ஆதாரமாகக் கொண்டு, நடவடிக்கை எடுப்பதோ, திட்டத்தை மாற்றுவதோ, புதிய முறைகளைப் பரிட்சை பார்ப்பதோ, நல்லதல்ல—ஆபத்தைத்தரும். மின்சார சக்தியுடன் கண்ணாமூச்சி விளையாட்டுக் கூடாது—எனவே, இந்தப்பிரச்னை, இவ்வளவு அதிகமாக, விவாதிக்கப்படுவது, நல்லது என்று எண்ணுகிறோம்—திடீர் முடிவுகள் ஆபத்தைத் தரும்.

பம்பாய் மிருகக்காட்சிச் சாலையிலே, உணவுப்பொருள் தட்டு ஏற்பட்டதும், மக்களுக்கு ‘ரேஷன்’ முறை இருப்பதுபோலவே, மிருகங்களுக்கும் ஏற்படுத்தினார்கள். ஒரு அருமையான பாடம்கிடைக்கிறது, அங்கு நடைபெற்றுவரும் சம்பவத்திலிருந்து.

எல்லா மிருகங்களுக்கும் — பறவைகளுக்குக்கூட, உணவின் அளவு குறைக்கப்பட்டு விட்டது — ஆனால், புலி, சிறுத்தை, சிங்கம் போன்ற துஷ்ட மிருகங்களின், உணவின் அளவுமட்டும் குறைக்கப்படவில்லை! ஏன்? அவை, தொல்லை அதிகம் தரும் என்ற அச்சமாம். மிருகக்காட்சிச்சாலையில் நடைபெற்றது போலவே மக்களிடையேயும், ஆதிக்கக்காரர்கள், மேட்டுக்குடியினர், ஆகியோருக்கு, கன்ட்ரோலும், ரேஷனும், எழுத்தளவோடு நின்றது, பொதுமக்களிலே, மிகப் பெரும்பாலோரைத்தான் இவைகளால் உண்டான தொல்லைகள் தாக்கின.

இன்று நமக்குக் கொடுத்து வரப்படுகிற குறைந்த பட்ச உணவு ரேஷன் அளவிலும் 45 லட்சம் டன் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்படுகிறது. இது, இனி 20 லட்சம் டன்னாகக் குறைக்கப்பட்டுவிடும்.

கட்டுப்பாடு ஏற்படுத்தினது எதற்கு? இங்கு உற்பத்தியாகும் பொருள் போதிய அளவு இல்லாததினால் தான் கட்டுப்பாடு செய்ய வேண்டியது அவசியமாயிற்று. இன்றும் இந்த நிலை மாற்றமடைந்துவிடவில்லை. விரைவில் மாற்றமுறும் எனும் நம்பிக்கை கொள்வதற்கும் மார்க்கத்தைக் காணோம்.

கட்டுப்பாடு நீக்குவதற்கு இதுசமயம் அல்ல. முதல்முதலாக உணவுப் பெருக்கத்திற்கு ஏற்பாடு வேண்டும். பின்னர் தான் கட்டுப்பாடு ஒழிப்புக்குச் சர்க்கார் செவிசாய்க்கவேண்டும். இதற்கான திட்டமென்ன?

* * *

கன்ட்ரோலை, இப்போது, எடுத்துவிடுவது நல்லதல்ல. நிலைமை சரியில்லை. கன்ட்ரோலை இப்போது எடுத்துவிட்டால், நாட்டின் பொருளாதார வாழ்வு சீர்குலையும்.

ஒரிசாகவர்னர்
**கைலாசநாத கட்ஜு**
நவ. 3.

* * *

உணவு கன்ட்ரோல் சம்பந்தமாக, எனக்கு, ஒவ்வொரு நாளும், வேண்டுகோள் வந்து குவிந்தவண்ணம் இருக்கிறது. கன்ட்ரோல் எடுக்கப்படவேண்டும் என்றவேண்டுகோள், வியாபாரிகளிடமிருந்தும், கன்ட்ரோலை எடுக்கக்கூடாது என்ற வேண்டுகோள், ரேஷன் மூலம் உணவுப்பொருள் பெறுபவரிடமிருந்தும் வருகின்றன.

**டாக்டர் ராஜன்.**

* * *

மழை, எதிர்பார்த்தபடி இல்லை—எனவே, விளைச்சல் விசாரம் தரக் கூடியதாகிவிடுமோ என்று அஞ்ச

(12ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
காஞ்சி] 23—11—47 [ஞாயிறு

# பாசமும் பாசீசமும்

★

பஞ்ச நிலைமை போகவில்லை.

உற்பத்தி பெருகவில்லை.

உழவர் துயர் தீரவில்லை.

பாட்டாளிக்கு நிம்மதி இல்லை.

பள்ளி ஆசிரியர் பதைக்கிறார்.

அதிகாரிகள் சம்பள உயர்வு கிடைக்கவில்லை.

கதர்த்திட்டம் வெற்றிதரவில்லை.

மதுவிலக்கும் வெற்றிகரமாக இல்லை.

மந்திரி சபையிலே ஒற்றுமை இல்லை.

சட்டசபையிலே, 'தூக்கம்.'

கட்சிக் கூட்டத்திலே, "கலகம்."

ஊழியர்களிடையே, கசப்பு.

உணவுக் கமிட்டி உபயோகமில்லை.

கட்டாயக் கல்வி பரவவில்லை.

கள்ளமார்க்கட் ஒழியவில்லை.

கொள்ளை இலாபம் போகவில்லை.

விற்பனைவரி உயருகிறது.

தமாஷ் வரி உயருகிறது.

தமிழாசிரியர் கதறுகிறார்கள்.

இனாம்தாரர் சீறுகிறார்கள்.

ஜெமீன்தாரர்கள் புதுப்பணம் பெறுகிறார்கள்.

எல்லைத்தகராறுதீர்க்கப்படவில்லை.

அடக்கு முறைக்குக் குறைவில்லை.

புதியபாதை போடவில்லை.

நீர்ப்பாசனதிட்டம், ஏட்டளவில்.

துறைமுகத்திருத்தம், பேச்சளவில்.

மாஜி பட்டாளத்திற்கு வேலை இல்லை.

I. N. A. வைக் கவனிக்கவில்லை.

வடநாட்டுஆதிக்கம்குறையவில்லை.

தமிழ்மொழிக்கு ஆக்கம், மேடையளவில்.

இந்திக்கு, மதிப்பு உயர்ந்து விடுகிறது.

கடல்கடந்த தமிழனைக் கவனிப்பாரில்லை.

புதிய தொழில் திட்டம் போடவுமில்லை.

ஆலை அரசர்களை அடக்க முடியவில்லை.

பண்ணைகளிலே அட்டகாசம் குறையவில்லை.

இலஞ்ச இலாவணம் போகவில்லை.

ஆட்சியாளரிடம் புதிய திட்டம் இல்லை.

ஆனால் காங்கிரஸ் நண்பனே! உனக்கோ, காங்கிரசிடம் உள்ள

மோகம்
தணியவில்லை.

வெளியே சொல்லக்கூசுகிறாய். விம்மி விம்மி, மனம் நோகிறாய்.

இந்தத் துக்கத்தைத்
தீர்த்துக் கொள்ள,

திராவிடர் கழகத்தைத் தூற்றுகிறாய். காங்கிரஸ் கூட்டம் நடத்துகிறாய், அனைவரும் சேரவாரீர் என்று அழைக்கிறாய்.

ஜனநாயக ஆட்சியிலே ஒரு கட்சி ஆட்சி செய்தால், அதன் தவறுகளை எடுத்துக் காட்ட, மாற்றுத்திட்டம் கூற, வேறோர் கட்சி இருக்க வேண்டுமே,

அந்தக் கட்சி இல்லையே!

ஒரே கட்சிதான் ஆட்சி செய்து வரும்—ஆட்சியிலே குறைபாடுகள் மலிந்துதான் இருக்கும்—எதிர்பாரா விபத்துகள்— எண்ணற்ற ஏமாற்றங்கள்— மனமுறிவுகள்—நடைபெறும் —ஆனால், அவைகளை எடுத்துக் காட்ட

வேறோர் கட்சியும் கூடாது

என்றும், கூறினால், பிறகு, அதற்குப் பெயர் என்ன? பாசிசம்தானே!

பாசிசம் வளருகிறது—நீயே அதனை வளர்த்துக் கொண்டு வருகிறாய்—உனக்கு அந்தக்கட்சி மீதுள்ள பாசம்—பாசிசத்தை ஏற்படுத்துகிறது.

பெருமைக்குரிய வெற்றி, கீர்த்திக்குரிய செயல், ஆசையைக் கிளறும் திட்டம், இவை ஒரு கட்சிக்குக் கிடைத்ததும், அது, தன் பிடியைப் பலப்படுத்திக் கொள்ளும்—நாளாக நாளாக, அதனிடம் இலயிக்கும் நண்பர்கள், குறைகளைக்கண்டு பிடிக்கத் தொடங்குவர். அப்போது, பாசிசம், ஏதேனும் ஓர்

புதிய ஆபத்து

வர இருக்கிறது, அதனைத் தடுக்க வேண்டும், அதற்கு ஒற்றுமைவேண்டும்கட்டுப்பாடுதேவை,குறைகள் இருந்தாலும்பொறுத்துக் கொள்ள வேண்டும், பொதுவான, நோக்கத்தைக்கவனித்துச் சில்லறைகளை மறந்துவிட வேண்டும், என்று கூறும்.

ஜெர்மனியைச் சூழ்ந்து கொண்டு எதிரிகள் உள்ளனர். வீர ஜெர்மன் இளைஞர்களே! எஃகுக் கோட்டையாக நமது கட்சி இருந்தாலொழிய மாற்றாரின் வாள் நமது தாய் நாட்டின் மார்பைத் துளைத்து விடும்—என்று ஹிட்லர் சொன்னான்; பாசிசப் பாடம்தான் அது.

இங்கும், இப்போது, பாசிசப் பாடமே தான் நடைபெறுகிறது.

இது வரை, வெள்ளை ஏகாதிபத்யம், இருந்தது, சுட்டிக்காட்டி, முறுக்கேற்றி மக்களைத் தங்கள் பக்கம் இழுக்க.

இப்போது, வகுப்புக் கலகம், என்ற சாக்கு உதவுகிறது.

வடநாட்டு வம்பை, வர்ணித்துக் காட்டி, இங்கு நடைபெறும், ஆட்சியிலே, அதனை நடத்தும் கட்சியிலே, அந்தக்கட்சியிலுள்ள தலைவர்களின் போக்கிலே காணப்படும் குறைபாடுகளை, மறைக்கவழிகோலப்படுகிறது. பாசிசம், புதிய பிரசாரபலம் பெறுகிறது. சரியா?

உங்கள் சிந்தனைக்கு இது. நன்றாகத்தெரிகிறது, மறைக்கமுடியாத அளவுக்கு, காங்கிரசை வடநாட்டு முதலாளிமார்கள், ராஜாதிராஜர்கள் ஆள்கிறார்கள், என்பது. என்றாலும் பாசம், விடவில்லை! அந்தப்பாசத்தையே துணையாகக்கொண்டு, பாசிசம் வளருகிறது. வேறு கட்சிக்கு இடமில்லை — கட்சிக்குள்ளாகவும் எதிர்ப்புணர்ச்சி கூடாது — இந்த அரசியல் திட்டத்துக்கு, நாம்கூறும் பாசிசம் என்ற பெயர் உங்களுக்குப் பிடிக்காவிட்டால், பொருத்தமான வேறோர் பெயர் கூறுங்கள் கேட்போம்.

நீங்கள் கூறுவதைப் பார்த்தால், நாட்டுக்கு, எதிரிகளால்ஆபத்துவராமல்தடுக்கவேண்டாமா? அதற்கான ஏற்பாடுகள் தேவையில்லையா? — என்று கேட்பாய். கட்டாயமாகத் தேவை, அதற்கான திட்டங்கள்.

ஆனால், அந்தத்திட்டங்கள்,ஆட்சியில் ஏற்படும் மற்ற அலுவல்கள் ஆகியவற்றைத் தீட்டவும் நிறைவேற்றவும், ஒருகட்சிதான் உரிமை பெற்றது, என்ற நிலைகூடாது-அந்த

நிலை இருந்தால், ஒழுங்கான முறை வளராது—என்கிறோம்.

தவறு பலசெய்தாலும் எப்படி மன்னன், பரம்பரைப்பாத்யதையினால், முடிதரிக்கும் உரிமை பெறுகிறானோ, அந்த முடியாட்சிக்கும், கேடு எது செயினும், சேகரித்து வைத்துள்ள கீர்த்தியைத் துணைகொண்டு, ஒரு கட்சி, எதிர்ப்பின்றி இருப்பதும், இரண்டும், ஒரே வகையான கேடு தான்—பெயர், வேறு, வேறு.

'அன்றோர் நாள்'-'முன்பெல்லாம்' "அரும்பாடு பட்டு" 'தியாக சேவை' —எனும்,வார்த்தைகள், காங்கிரசுக்கு அர்ச்சிக்கப்பட்டு, அந்த மலர்கள், கள்ளமார்க்கட்காரர் மீதும், காட்டு ராஜாக்கள் மீதும், மேட்டுக் குடியினர் மீதும், நாட்டுக்கு ஊறுதேடுபவர்கள் மீதும் தூவப்பட்டுவருகிறது —இது நன்றாகத்தெரிகிறது—என்றாலும் பாசம் விடவில்லை.

காங்கிரசின், மகத்துவத்தை இனியும் எடுத்துக்காட்டி, வேறுகட்சி எதுவுமே தலைகாட்டக் கூடாது என்று எண்ணி,அதற்கேற்றபடி நடந்து வந்தால்,நிச்சயமாக,பாசீசம்தான், உருவாகமுடியும். வேலை முடிந்தது,வேறு திட்டம்சொல்—என்றுகாங்கிரசைக் கேட்கவும், அந்தத் திட்டத்தைப்பரிசீலனை செய்யவும், மாற்றுத்திட்டம் எவரேனும் கூறினால், சமத்துவ உணர்ச்சியுடன், இரண்டையும் சீர் தூக்கிப் பார்க்கவும், இரண்டிலே, எது சிலாக்கியமானதோ, அதனை ஆதரிக்கவும், பழகவேண்டும். ஜன நாயகம் வளர அதுதான் வழி. ஆனால், இதற்கு, முதலில் அந்தப் பாசம், போகவேண்டும், அதுலேசில் போகாது! பந்தம் பாசம் ஆகியவைகளை அறுத்துக்கொள்ள, ரிஷிகள், காடுசென்று தவம் புரிந்தார்களாமே, அதுபோல, இங்கும், பாசீசத்தால் தாக்கப்பட்டு, பலநாள் ஆசைகள்கெட்டு, எதிர்பாரா ஏமாற்றங்கள்வளர்ந்து, மனம் முறிந்து, பிறகுதான்பாசம்போகும். இடையே முனிவர்களை மயக்க, மாயா மனோகரிகள் வருவதுபோல, வசீகரத் திட்டங்களை ஏட்டிலே தீட்டிக்காட்டவும் கூடும். இடையூறுகளை உண்டாக்கித்தவத்தைஅழிப்பார்களாமே, அதுபோல, இடையூறுகள், உண்மையோ நிஜமோ, ஏதோஒன்றைக் காட்டி, பாசத்தைத் தங்கவைக்க முயற்சி செய்யப்படக்கூடும். இத்தனையையும் தாண்டித்தான், ஜனநாயகத்தை அடைய முடியும்.

'நமது ஒப்பற்ற கட்சியினால் நாடு ஈடேறும்' என்று துவங்கி, 'நமது மாபெருங் கட்சி நாடு ஈடேற வழி செய்யவேண்டும்' என்று பேசப்பட்டு, 'நமது கட்சியைத் தவிர, வேறு கட்சிகளால், அதிலும் வகுப்புவாத, சுயநலக் கட்சிகளால் இந்த மகத்தான காரியத்தைச் சாதிக்க முடியாது'—என்றுபேசி— 'நமது கட்சியின் போக்கு வகுப்புவாதக் கட்சிகள்கூடக் குறைகூறும்படி இருக்கிறதே,' என்று மாறி, 'இந்த இலட்சணத்திலே நமது கட்சி இருக்கும்போது, மற்றக் கட்சிகளை நாம் குறைகூறிஎன்னபலன்?' —என்றுபேச்சு,எக்களூபம் எடுத்து, 'எப்படிப்பட்ட கட்சி! எவ்வளவு எதிர்பார்த்தோம்! இதை வளர்க்க என்னென்ன பாடுபட்டோம்!'—என்று பழங்கதை பேசிக், கோபத்தைக் குறைக்கப் பார்த்து, 'பழைய பெருமையை முதலாக வைத்துக் கொண்டு, கடைசிவரை நம்மை வசியப்படுத்த முடியாது'—என்று எச்சரிக்கை விடுக்கும் குரல் காட்டி, பிறகு "அப்போது இருந்தாய் அப்சரசாக! இப்போது?" என்று கேலியாகப் பேசிப் பிறகு, ஜனநாயகத்தைத் தேடச் சொல்லும்.

இந்த, எண்ணப் பயணத்தைத் தாமதப்படுத்துவது, ஒரே ஒரு விஷயந்தான். வடநாட்டுக் கலக நிலைமை! ஆனால், பயணம், தாமதப்படுமே ஒழிய, அடியோடு நின்றுவிடாது—நிச்சயம் அந்தப் பயணம் உண்டு. நாம் சற்று, முன்னேறுகிறோம். அவ்வளவுதான் வித்யாசம், நமக்கும் காங்கிரசிலுள்ள நண்பர்களுக்கும்.

"அன்னிய ஆட்சியின் விபரீத விளைவுகளே உணவுப் பஞ்சமும், லஞ்ச ஊழலும், கள்ள மார்கெட்டும். நாட்டில் தலைவிரித்தாடும் பஞ்சத்தைத் தீர்க்க ஆங்கில ஆதிக்கத்திற்கு அக்கரை கிடையாது. அதை சமாளிக்கும் சக்தியும் அதற்கில்லை. பஞ்சத்திற்குக்காரணபூதமான பரங்கிய சர்க்கார் ஒழியவேண்டும். சென்ற தேர்தலில் மக்களின் வாக்குகளை வாங்க மேடையேறி மேற்சொன்ன பாணியில் வீரமும்உணர்ச்சியும் சொட்டப் பேசினர் காங்கிரஸ் தலைவர்கள்.

அவர்களின் பகட்டான வார்த்தைகளை நம்பிய தேசியப்பற்று மிகுந்த மக்கள் யாவரும் காங்கிரஸுக்குத் தங்கள் வாக்குகளைச் செலுத்தினர். அவர்களுடைய ஓட் பலத்தைக் கொண்டே மந்திரி பதவிகளைக் காங்கிரஸ் தலைவர்கள் கைப்பற்ற முடிந்தது. பொதுஜன ஆதரவு இல்லாதிருப்பின், அந்த உன்னத ஸ்தானங்களை மேற்படி காங்கிரஸ் தலைவர்கள் எட்டிப் பிடித்திருக்க மாட்டார்கள். இது அவர்களின் அந்தராத்மாவுக்குத் தெரியாததல்ல. இவ்வாறாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்துவந்த காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சிபீடத்தி லமர்ந்ததும் என்ன செய்திருக்க வேண்டும்? எந்த புனிதமான விடுதலை ஸ்தாபனமான காங்கிரஸின் நாமத்தை ஜெபித்து அதிகாரக்கடிவாளத்தைக் கைப்பற்ற முடிந்ததோ, அந்த ஸ்தாபனத்தின் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற காங்கிரஸ் மந்திரிகள் என்ன முறைகளைப் பின்பற்றியிருக்கவேண்டும்?

"பஞ்சத்தைப் பறக்க அடிப்போம். கள்ளமார்க்கெட்டை கருவறுப்போம். லஞ்சத்தை மிஞ்சவிடாது வேட்டையாடுவோம்" என்று சிறிதும் சலிப்புத்தட்டாமல் வாக்குறுதிகளை வீசிக்கொண்டே சென்ற காங்கிரஸ் தலைவர்கள், பதவிக்கு வந்ததும் பறக்க அடித்தது பஞ்சத்தையல்ல. ஆடிக்காறறோடு தம் வாக்குறுதிகளையே பறக்கடித்தனர். லஞ்ச வேட்டையாடுவதாக வீரம் பேசியவர்கள் பதவி வேட்டையிலும், 'பெர்மிட்' வேட்டையிலும் இறங்கினர். அதோடு லஞ்சத்தில் உழலும் அதிகாரவர்க்கத்துடன் இவர்கள் இரண்டறக் கலந்தனர். அதுமட்டுமா! கள்ள மார்க்கெட்டயவர்களின் உற்ற தோழர்களாகி அதிகார மோகத்தில் ஆழ்ந்து உணர்வு அழிந்தனர். இப்பதவி வேட்டைக் கபட நாடகத்தின் எதிரொலியே 'மந்திரி சபை பூகம்பம்' இதன் பயனாக காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் கொண்டிருந்த நல்லெண்ணம் காற்றோடு காற்றாகக் கரைந்து போயிற்று. காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு அலுப்புத் தட்டியிருப்பதாக ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபாளினியே பழித்துக் கூறுமளவுக்கு வந்துவிட்டதென்றால் எப்படி யிருக்கும் நிலைமை."

என்று, எழுதுகிறது; விடுதலை அல்ல—தமிழ்நாடு—! தமிழ்நாடு என்றால், சென்னையில் நண்பர் பார்த்த சாரதி வெளியிட்டாரே அந்த இதழ் என்று எண்ணி விடாதீர்கள்—இது

மதுரை, 'தமிழ்நாடு' — காங்கிரசை ஆதரிக்கும் ஏடு!

இவ்வளவும் எழுதிவிட்டு, என்ன கூறுகிறது, போலால்—? கன்ட்ரோல் எடுபடவேண்டும் என்று. காங்கிரசின் பாசம் கூடாது என்றல்ல, நாம்முன்னால் கூறியுள்ளபடி துவக்கநிலை இது—எனவே, பாசத்தை அறுத்துக்கொள்ள முடியாது— சொல்ல முடியாமலும் விழுங்க முடியாமலும் அவஸ்தைப்படும் நிலைமை. இது எவ்வளவோ பரவாயில்லை—வேறு பல ஏடுகள் உள்ளன—ஒரே அடியாக மூடிபோட.

இதுபோல, அடிக்கடி மூச்சுவிடுவர்—முணு முணுப்பர் — முற்றம் வரவும், பாசம் அறுத்துக் கொள்ளவும் உடனடியாக முடியாது. ஆனால், நாம் கூறினபடி, பயணத்தின் துவக்கம் இது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது—மனச்சாட்சியை, "தாரைவார்த்துக்" கொடுத்துவிட்டிருந்தாலொழிய.

ஒரு முறை, மீண்டும், அந்த ஏடு வெளியிடும் கருத்துரையைப் பார்க்க வேண்டுகிறோம் — காங்கிரஸ் நண்பர்களே.

பகட்டான பேச்சு
வாக்குறுதி பறந்தது
பதவி வேட்டை
இலஞ்சத்தில் பங்கு
கள்ளமார்க்கட் உறவு
அதிகார மோகம்.

இவ்வளவு குற்றச் சாட்டுகள்! கடுமையான குற்றச்சாட்டுகள். நாகரிக நாட்டிலே, ஜனநாயக உணர்ச்சியுள்ள எவரும், சகித்துக்கொள்ள முடியாது, தங்கள் கட்சியின் ஏடு, தங்களைப்பற்றி இவ்வளவு பச்சையாகக் கண்டிப்பது கண்டு. ஆனால் இங்கு, காங்கிரஸ் தலைவர்கள் சகித்துக்கொண்டனர். ஆச்சரியம்! என்கிறீர்களா? ஆச்சரியம் அதிலே இல்லை! இவ்வளவு குற்றச்சாட்டுகளுக் குரியவர்களான, தலைவர்களை, ஏடு, சகித்துக் கொண்டிருக்கிறதே, அதுதான் ஆச்சரியம்! ஆனால் அதற்கு என்ன காரணம்? பாசம்! பாசம்! பொல்லாத நோய்; எளிதில் போவதில்லை!!

✲

9-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டி இருக்கிறது. அடுத்த ஆண்டு, அரிசி நிலைமை சரியாக இருக்குமா என்பதுபற்றிக் கவலையே உண்டாகிறது.

C. K. **விஜயராகவன்**
சிவில் சப்ளை கமிஷனர்.

* * *

உணவுக் கட்டுப்பாடு பற்றியஇவ்விதமான கருத்துக்கள் வெளியாகியுள்ள பின்னரும், இந்திய சர்க்கார் உணவுக் கட்டுப்பாட்டை எடுத்துவிடுவதென்ற முடிவுக்கு வந்திருப்பதானது, எந்த விதமான ஆபத்தைக் கொண்டுவந்து விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

கடந்த வாரத்தில், சென்னையில், திராவிடர் கழகத்தின் சார்பில் கூட்டப் பெற்ற உணவு—உடை ரேஷன் பெறுவோர் மாநாட்டிலும், உணவு ரேஷன் அளவை இன்னும் அதிகப்படுத்தலாமேயொழிய, அதனை அடியோடு எடுத்துவிடக் கூடாதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்பதையும் சென்னைச் சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

—

## தவறு

ராணிப்பேட்டையில், சின்னாட்களில், ரேஷன் ஒழிப்புக்கூட்டம் நடைபெறப் போவதாகவும், நான் அதிலேபேசஇருப்பதாகவும், அறிக்கைவெளிவரக் கண்டேன். நான், அப்படி ஒரு கூட்டத்துக்கு வருவதாக ஒப்புக்கொண்டதில்லை, வருவதாகவுமில்லை என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

அன்பன்
அண்ணாத்துரை

## "நியு ஈரா"

" நியு ஈரா " என்ற ஆங்கில வார இதழ் சென்னையில் இருந்து இன்னும் சில நாளில் வெளி வரும். ஏஜன்சி எடுக்க விரும்பும் தோழர்கள், "திராவிட நாடு" இதழில் அது வெளிவரும் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் ஏஜன்சி நிபந்தனைகளுக்கு எழுதவும்.

**மானேஜர்.**

## பட்டி மன்றம்

இந்தப்புதிய பகுதி, நமது தோழர்களிடையே, உள்ள கருத்து வளர்ச்சியை நாட்டுக்கு அறிமுகப்படுத்துவதற்குத், துவக்கப்படுகிறது.

ஒவ்வோர் திங்களும் ஒரு புது பிரச்னைபற்றிய கருத்துரை கோரப்படும்.

பலருடைய கருத்துரை வெளிவர வேண்டுமாகையால், அன்பர்கள், திராவிட நாடு இதழில், 2 காலம் அளவு இருக்கும்படி, தங்கள் கருத்துரையைத் தீட்டி அனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்!

அடுத்த கிழமை இதழில் வெளியிடுவதற்கு—பிரச்னை—

"கல்வித்திட்டம்"

——

## ஏன் இந்தப்பரிவு?

காலஞ் சென்ற, உ. வே. சாமிநாத ஐயர் பேரால், அடையாறில், ஓர் படிப்பகம் இருக்கிறது. இந்தப் படிப்பகத்தார், உ. வெ. சாமிநாத ஐயரின் குறிப்புரையுடன் கூடிய கம்பராமாயணத்தைப் பதிப்பிக்கப் போகிறார்களாம். இதற்கு, சென்னை பல்கலைக்கழகத்தார் 4000 ரூபாய் நன்கொடை தரவேண்டுமென்று, கேட்க, பல்கலைக்கழகம் 2000 ரூபாய் தர இசைந்திருக்கிறது. இதுவரை, வேறு, எந்தப் புத்தகம்வெளியிடவும் ஆயிரம்ரூபாய்க்குமேல், நன்கொடை தந்ததில்லை. ஆனால் இதற்குமட்டும், விசேஷச் சலுகை காட்டி 2000 ரூபாய் அள்ளித் தரப்படுகிறது. ஏன் இந்தப் பரிவு? இப்போது, இந்தப் புத்தகம் வெளியிட வேண்டிய அவசியமோ அவசரமோ என்ன? எந்த அருமையான புதிய விஷயத்தை நாட்டுக்கு அளிக்கும், அந்தப் பழய ஏடு? இவைபற்றி, பலகலை பயின்றவர்கள், யோசித்தனரா? இல்லை! கம்பராமாயணம்—சாமிநாத ஐயர்—அடையாறு—என்னும் மூன்று சொற்களைக் கேள்விப்பட்டஉடனே, அவர்கள், கிடுகிடுவென்று ஆடிப் போய், இரண்டு ஆயிரம் தர இசைந்துவிட்டனர். இல்லையானால், எங்கே, தூற்றிவிடுகிறார்களோ, கலையறிவில்லாக் கயவரென்று ஏசுவரோ, என்ற கவலை—அச்சம்.

●

## அவர் திறமை

உலகிலேயே அதிகதூரம் விமானத்தை ஓட்டிச்சென்ற பெருமை, நிகோலாய் நோவிகாவ் எனும் ரஷ்ய விமானியுடையது. இவர் இதுவரை 1,875,000 மைல்கள் விமானத்தில் பிரயாணம் செய்திருக்கிறார்

——

## ஆசிரியர் சிந்தனைக்கும்

8-ம் பக்கத் தொடர்ச்சி

குப் பித்தம் தலைக்கேறி விட்டது; ஆதனாலேதான் எங்கும்—என்றும் இல்லாத வழக்கத்தைக்கூறுகின்றார்" என்று வெகுண்டார். அப்பொழுது, பார்ப்பன வடிவத்தில் வந்த சிவன், ஆரூரார் அருகே சென்று, "அடே அந்தக்காலத்தில் உன் பாட்டன் எனக்கு எழுதிக்கொடுத்த அடிமை ஓலை என்னிடம் இருக்க, நீ என்னை இகழ்ந்து நகையாடலாமா" என்று கேட்டார். உடனே ஆரூரார் அவரைத் துரத்திச் சென்று அந்த அடிமை ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்து விட்டார். அருகில் இருந்தவர்கள் இருவரையும் விலக்கி, வேதியரைநோக்கி, "என்னஐயரே! உலகத்தில் இல்லாத வழக்கைக் கொண்டுவந்த நீர் எங்கே இருப்பவர்" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "நான் இருப்பது திருவெண்ணெய்நல்லூர்" என்றார். "அப்படியானால் இந்த வழக்கை அங்கே போய்ப் பேசலாம்" என்று கூறி, எல்லாரும் அங்கு சென்றார்கள். அங்குள்ள பார்ப்பனர்களும்,"பார்ப்பனர் அடிமையாகும் வழக்கம் இல்லையே" என்றனர். அதற்கு, அந்த வேதியர், "என்னுடைய வழக்கு உண்மையானது— நியாயமானது— ஆரூரனும் அவனது பரம்பரையினரும் எனக்கு அடிமை என்று ஆரூரனுடைய பாட்டன் எழுதிக் கொடுத்திருக்கிறார்—ஆரூரன் என்னிடமிருந்து பிடுங்கிக்கிழித்தெறிந்த ஓலை, மூலவோலையைப் பார்த்து எழுதியபடி (நகல்) ஓலையாகும். மூலவோலை என்னிடம் இருக்கிறது" என்றார். அந்த ஓலையில், "திருநாவலூரில் வாழும் ஆதிசைவனாகிய ஆரூரன், திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக்கொடுத்தது:— யானும் என்மரபினரும் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு வழித்தொண்டு செய்ய அகமும் புறமும் ஒத்து உடன் படுகிறோம். இங்ஙனம்: ஆரூரன்" என்றுஎழுதப்பட்டிருந்தது. அதில் சாட்சிகளாகக் கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒத்துக்கொண்டார்கள். இவ்வளவும் பெரியபுராணத்தில், தடுத்தாட்கொண்ட பகுதியில் காணப்படுபவை.

இப்பகுதியில்பேசப்படும், "பார்ப்பனர் பிறருக்கு அடிமையாகும்வழக்கம் இல்லை" என்பது, அக்காலத்துப் பார்ப்பனர்களாலேயே மிகவும் வன்மையாகக்கண்டிக்கப்பட்டுள்ளது என்பது மேற்கூறப்பட்ட நிகழ்ச்சியால் நன்கு புலனாகின்றது. என்ற போதிலும், பார்ப்பனரும் பிறருக்கு அடிமையாக இருக்கலாம் என்பதனைச் சேக்கிழார் மிகவும் நயமாகவலியுறுத்தியுள்ளார். அதாவது ஆரூரார் என்ற பார்ப்பனனைஅடிமைகொள்ள வந்த பார்ப்பனன், உண்மையிலேயே ஒரு பார்ப்பனன் அல்லவென்றும், அங்ஙனம் பார்ப்பனவடிவில் வந்தவர் சிவனே என்றும், சிவனுக்குப் பார்ப்பனர் அடிமையாதல் குற்றமில்லை என்றும் பொருள் கொள்ளும்முறையில், பாம்பும் சாகவேண்டும்,தடியும் உடையக்கூடாது எனும் முறைப்படி சேக்கிழார் தம்முடைய எழுத்துவல்லமையைக்காட்டியுள்ளார். பார்ப்பனர், பார்ப்பனருக்கோ, அன்றிப்பிறருக்கோ அடிமையாய் இருத்தல் முறையா, அல்லவா என்பதுபற்றி ஆராயப்புகுந்தால் அது மிகவிரியும். எனவே அதனை இவ்வளவோடுநிறுத்திச், சிவனார் ஆரூரரை அடிமைகொண்ட பகுதியைத் தொடர்ந்து ஆராய்வாம்.

ஆரூரரை அடிமை கொள்ளவந்த வேதியர், ஆரூரனால் பறித்துக் கிழித்து எறியப்பட்ட அடிமை ஓலை மூலஓலையைப்பார்த்து எழுதப்பட்ட நகல் ஓலை என்று கூறுகிறார். இருக்கலாம். ஆரூரன் என்ற பார்ப்பனனை நோக்கி, "நீஎனக்குஅடிமை"என்று கூறினால், ஒருவேளை அவன் அந்த ஓலையைப்பறித்துக் கிழித்துவிட்டாலும் விடக்கூடும் என்ற முன் எச்சரிக்கையோடு அந்த ஓலைக்கு நகல் எடுத்துவைத்திருக்கலாம். அல்லது இத்தகைய ஓலைகளுக்குச் சாதாரணமாகவே நகல் எடுத்துவைத்திருக்கும் வழக்கம் அந்தக்காலத்தில்இருந்திருக்கலாம். எனவே ஆரூரனால் கிழிக்கப்பட்ட அடிமை ஓலை, நகல் ஓலை என்பதில் நமக்குஐயுறவில்லை. ஆனால் அந்த ஓலையில் எழுதப்பட்டு இருந்ததாகச் சொல்லப்படும் வாசகங்களைத்தான் நம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அந்த ஓலையில் ஆரூரன் பித்தனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்று காணப்படுகின்றது. ஆரூரன் என்ற பெயர் இங்கு பேசப்படும் சுந்தரருக்குஅவர் தந்தையாரால் இடப்பட்ட பெயராகும். ஆனால் அடிமை ஓலை எழுதிக் கொடுத்தவரின் பெயரும் ஆரூரன் என்று காணப்படுவதால் — எழுதிக் கொடுத்தவர் சுந்தரருக்குப் பாட்டனார் என்றும் பேசப்படுவதால்—ஒருவேளை, பாட்டனாரின் பெயரையே சுந்தரருக்கும் வைத்திருக்கலாம். அதிலும் நமக்குத் தினைத்துணையும் ஐயமின்று. ஆனால் அடிமைஓலை எழுதி வாங்கியவர் பெயர், பித்தனென்று அந்த ஓலையிலேயே காணப்படுகின்றது. இந்தப் பித்தனென்ற பெயர் அவருக்கு எப்போது— யாரால் ஏற்பட்டது? ஆரூரனை அடிமை கொள்வதற்காக மணப்பந்தருக்கு வந்த பின்னர், ஆரூரருக்கும் வேதியருக்கும் ஏற்பட்டகலகத்தின்போது, ஆரூரார் அந்த வேதியரை நோக்கி, "நீ பித்தனோ"என்று கேட்டபின்னர் ஏற்பட்ட பெயராகும். வேதியராகவந்த அந்தச்சிவனுக்குப் பித்தனென்ற பெயர் அதற்குமுன் இருந்ததில்லை. அவரே கூறி இருக்கிறார், "நீ என்னைப்பித்தனென்று அழைத்தமையால், என் பெயர் பித்தனென்றே பாடு" என்பதாக. இந்தப்பித்தனென்ற புதுப் பெயர், பல ஆண்டுகளுக்கு முன் இருந்து, இறந்துபோன ஆரூரரின் பாட்டனாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஓலையில் காணப்படுகின்றது. இது விந்தையிலும் விந்தையன்றோ? ஆரூரனால், சிவனுக்குவழங்கப்பட்ட இந்தப்பெயர், ஆரூரரின் பாட்டனாரால் எழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படும் அந்த அடிமை ஓலையில்எப்படி இடம் பெற்றதென்று, மாணவர்கள், தங்களுக்குப்பாடமாகவைத்துள்ள தடுத்தாட்கொண்ட புராணத்தை நடத்துகிற ஆசிரியரைக் கேட்டால், அதற்கு அவர் என்ன விடையிறுப்பாரோ! ஒன்றினுக்குக் கூறப்படும் விடை, எடுத்துக்கொண்ட நிகழ்ச்சிக்குப் பொருந்தக்கூடியதாகவும், அறிவும்-அனுபவமும்அதனைஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுமன்றோ இருத்தல் வேண்டும். அங்ஙனமன்றி, எது எப்படி இருந்தபோதிலும் அதனை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டு — நம்ப வேண்டுமென்ற புராண மனப்பான்மை, பழைமைப் பிடியிலிருந்து விடுபட்டுப்—புத்தறிவு பெற்றுப், புதுவாழ்வுக்கு அடிகோலி, அறிவுலகச் சிற்பிகளாகத் திகழ இருக்கும் மாணவர்களுக்குப் பயன்படாது— தேவைப்படாது. என்பதனை ஆசிரியஅன்பர்கள்உணர வேண்டியகாலம் வந்துவிட்டது.

(தொடரும்)

# கேள்வியும் :: பதிலும்

**1 ஏடுகளில் காணப்படும், கலாச்சார வரலாற்றின் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு, ஆரியர்—திராவிடர் என்று பேசுகிறீரே, இன இலக்கணங்கள் இன்று மாறுபட்டுள்ளன என்பதை ஏன் ஏற்க மறுக்கிறீர்,**

*மறுக்கவில்லை, நண்பரே! மறுத்ததுமில்லை. இனங்கள் பலப்பல காலமாக ஓரிடத்தில் வாழ்வதால் கலப்பு ஏற்படுவது இயல்பு என்ற பொதுஉண்மையை யாரும் மறுக்கவில்லை. ஆனால், எவ்வளவு காலமாக ஒன்றாக வாழ்ந்தும், கலந்திருந்தும் கூட, ஒரு கூட்டத்தினர் இன்னமும், தங்கள் மொழி, நடை, உடை, பாவனை, ஆகியவைகளை, மற்றவர்களிலிருந்துவேறுபடுத்திக் காட்டியும், உயர்வு என்று கூறியும் வருவதைக்காண்கிறோம். இந்தப் போக்கைக் கொண்டுதான், ஆரியர்—திராவிடர் என்று கூறுகிறோம்; வாழ்க்கை முறை மனப்பான்மை' இவைகளையே முக்கியமாகக் கவனிக்கிறோம். ஜப்பான் காட்டவனொருவன், மக்கள் பிறவியில் பேதம் கிடையாது, என்று கூறி, அத்தகைய பேதம் இருக்கும் முறைகளை மறுப்பானானால், அவனையும், திராவிடன் என்று நான் கொள்வேன் என்று பெரியார், சென்ற கிழமை குமரிமுனையருகே—நாகர்கோயிலில் கூறி இருக்கிறார், என்பதை நண்பருக்குக் கவனப்படுத்துகிறேன், சுருக்கமாகவும், சூட்சமத்தைக் காட்டும் முறையிலும் கூறுவதானால், வர்ணாஸ்ரமதர்மத்தை ஆதரிப்பவர் ஆரியர், வர்ணாஸ்ரம தர்மம் கூடாது சமத்துவமே நிலவ வேண்டும் என்பவர்கள் திராவிடர்; சுதர்மம் கோருவோர் ஆரியர், சமதர்மம் கோருவோர் திராவிடர். திராவிடர் ஒரு குறிச்சொல். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை இலட்சியத்தைக் காட்டவே அதனை உபயோகிக்கிறோம்.பழையஏடுகளிலேஇருந்து இதற்கான ஆதாரங்கள் காட்டும்போதும், நாம், அந்த நாள் கலாச்சாரம் அவ்வளவையும் ஆதரிக்கிறோம் என்பதல்ல பொருள். ஆரியர் — திராவிடர் என்று தனித்தனி இனமாக இருந்த வரலாற்று உண்மையைக் காட்டவே, அந்த ஏடுகளைப் பயன்படுத்துகிறோமேயன்றி, அந்த ஏடுகளிலே உள்ளபடி, நாடு மீண்டும் ஆக வேண்டும் என்பதற்கல்ல. அந்த நாள், வாளும் வேலும், ஈட்டியும் சூலமும், பறையும் பாசலும், இன்றும் நம்மை ஆட்கொள்ளவேண்டும் என்பதல்ல, நமது நோக்கம். ஒரு காலத்தில், ஜாதியும் அதை யொட்டிய பேத முறைகளும்—வர்ணாஸ்ரமமும் அதை வளர்த்துப் பலன் பெற்ற கூட்டமும், இல்லாமல், மக்கள் அனைவரும் சமம், என்ற பெருநோக்குடன் வாழ்ந்து வந்தனர், இந்தப் பகுதியிலே இருந்துவந்த பெரும்பாலான மக்கள், அவர்கள் திராவிடர் என்று அழைக்கப்பட்டனர் — அவர்கள் கொண்டிருந்த* **அந்தக்கோள்கை** *இன்று நமக்கு வேண்டும் என்று கூறுகிறோம். இதிலே பரிகசிக்கவோ, அருவருக்கவோ காரணமில்லையே!*

**2. திராவிடத்தின் மொழி யாது?**

**திராவிடம்** *என்பது கூட்டாட்சி—அதிலே, தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட மொழியினரின் நாடுகள் இருக்கும். அந்தந்த நாடுகளிலே, தாய் மொழியே ஆட்சி செய்யும். கூட்டாட்சிக் குழுவுக்கு, உலகத்தில் பெரும் பகுதியினரால் கொள்ளப்பட்ட ஆங்கிலத்தை, மொழியாகக் கொள்ளலாம், என்ற கருத்தைத் திராவிடர் கழகம், அக்காலை எடுத்துரைக்கும், கூட்டாட்சியிலுள்ள நாடுகளின் பெரும்பான்மை ஒப்பம் கிடைத்தால் கொள்ளும் — இல்லையேல் கூட்டாட்சியில் ஈடுபடும் நாடுகளின் கருத்தறிந்து, எம்மொழிக்குப் போாதரவு கிடைக்குமோ , அம்மொழி, கொள்ளும் எக்காரணம் பற்றியும் அந்தந்த நாடுகளிலே (தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம்) உள்ள தாய்மொழிக்கு ஆட்சிப் பீடம் இல்லாமற் போகாது.*

**3. வேங்கடம் நமது எல்லை; அதை அடையாதவாறு, திராவிடர் கழகம் தடுக்கிறது, என்று தமிழரசுக் கழகம் கருதுவது சரியா?**

*சரியல்ல. எல்லை கோலும் வேலையை முன்னணி கொண்டது அக்கழகம்—நெடுங்காலமாக இருந்துவரும் வர்ணாஸ்ரமத் தொல்லையை நீக்கும் பணியை முன்னணியில் கொண்டுள்ளது நம் கழகம். இவை, முரண்பாடுகள் அல்ல. மோதுதலும் அவசியமில்லை.*

**4. உமக்குத் தளபதி என்று பெயர் சூட்டியது சரியா?**

*இல்லை. பொருத்தமாக இன்றுஅதைத் திருத்தி அமைப்பதானால், தளர்பதி என்று கூறலாம்—உடல், உள்ளம் இரண்டும் தளர்ந்திருக்கும் காரணத்தைக் கொண்டு.*

**5 திராவிட நாடு தனி நாடானால் முதன் முதலாக அமுலுக்கு வரக்கூடிய சீர்திருத்தச் சட்டம் என்ன?**

*ஜாதி ஒழிப்பு.*

**6. கம்யூனிஸ்டு கட்சிக்கும் திராவிடர் கழகத்துக்கும் கொள்கையில் உள்ள வேற்றுமை என்ன?**

*ஒரு அடிப்படை வேற்றுமை இருக்கிறது—திராவிடர் கழகத்துக்குச் சொந்தக் கொள்கை உண்டு—கம்யூனிஸ்டு கட்சிக்கு, செல்வாக்குப் பெற்று வருவதை எல்லாம் சேர்த்தணைத்து இன்புறும் கொள்கை உண்டு. பொருளாதார முனையை மட்டும் கவனித்தால் போதும் என்கின்றனர், கம்யூனிஸ்டுகள்—திராவிடர் கழகம் சமுதாயசீர்திருத்தமும், அதற்கும் முன்னதாக மக்கள் மனதிலே திருத்தமும் தேவை என்ற கொள்கை கொண்டிருக்கிறது.*

**7. பொது மக்களின் ஆதரவைப் பெற, மற்றக் கட்சிகள் கையாளும் தந்திரத்தை திராவிடர் கழகமும் ஏன் கையாளக்கூடாது?**

*தந்திரம் — தற்காலீக வெற்றியே தரும். அது போதாது. எனவே, திராவிடர் கழகம் அதைக் கையாள்வதில்லை. தந்திரத்தைக் கையாள்வதைவிட, முறைகளைக் கையாளலாம் — அந்தக் காரியம் ஓரளவுக்கு நடந்துகொண்டுதான் இருக்கிறது. இதுவரை நமக்குப் பத்திரிகைகள் அதிகம் இருந்ததில்லை — இப்போது ஏராளம். இதுவரை இல்லாத அளவுக்கு, உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறார்கள்—கிளைக்கழகங்கள் நிறுவப்படுகின்றன எனவே, மற்றக் கட்சிகளைப்போல, வெற்றி தரத்தக்கமுறைகளை நாமும் கையாளத் தொடங்கியிருக்கிறோம். நண்பர் கூறுவது போல, தந்திரம், கையாளவில்லை—தேவையுமில்லை.*

**8 நகைச்சுவை அரசர் N S. கிருஷ்ணன், எந்தக்கட்சி?**

*மக்கள் சமத்துவம் பெற்று, சமதர்மம் பெற்று, இன்பமாக வாழவேண்டும் என்று எண்ணி, இவற்றிற்குத், தமது துறையிலிருந்த வண்ணம், செய்யக் கூடியதைச் செய்யவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். எந்த அரசியல் கட்சியிலும் அவர் அங்கத்தினர் என்று, எனகுத் தெரியவில்லை.*

**9, சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில், திராவிடர்கழகம் போட்டியிடப் போகிறதா?**

*இதுபற்றிக்கழகம், இன்னும் எந்த முடிவுக்கும் வந்ததாகத் தெரியவில்லை.*

**10. நீர். கட்சியிலிருந்து ஒதுங்கினீரா, ஒதுக்கப்பட்டீரா?**

*ஒதுங்க நேரிட்டது!*

**11. சதாகாலமும் பார்ப்பனர்களைத் தூஷிக்கிறீர்களே, இப்போது கவர்னர் ஜெனரலே, ஒரு பார்ப்பனர். இதைக்கண்டு, வெட்கப்படுவீரல்லவா?**

*சட்டசபையிலே, பதில் கூறும் முறையிலே, கூறுகின்றேன்—நண்பரின் கேள்வியின் முதல்பகுதிக்கு, என்பதில், 'இல்லை' என்பது தான்—இரண்டாவது பகுதிக்கும், அதேதான் பதில்.*

***இனி விளக்கம் கூறுகிறேன். சதா***

காலமும், பார்ப்பனர்களை, நாம் தூஷிப்பதில்லை—அவசியமுமில்லை. ஒருமுறையைக்கண்டிக்கிறோமே தவிர, தனிப்பட்டநபர்களையல்ல, மார்வாடிக்கடை என்று கூறும்போது எப்படி, அதிகவட்டி வாங்கும் அனைவரையும் அந்தச் சொல் குறிக்கிறதோ, அதுபோல, பார்ப்பனியம் என்று கண்டிக்கும் போது, பார்ப்பனர் மட்டுமல்ல, வர்ணாஸ்ரமதர்மத்தை ஆதரிக்கும் பார்ப்பனரல்லாதாரும், அந்தப் பட்டத்துக்கு உரியவர்களாகிறார்கள்—எனவே பார்ப்பனர்களைத் தூஷிக்கிறோம் என்று எண்ணுவது தவறு—தவறான எண்ணத்தையே ஆதாரமாகக் கொண்டு, எங்கள் மீது குற்றம் சாட்டுவது அநீதி.

கவர்னர் ஜெனரலாக, ஆச்சாரியார் அமர்ந்திருப்பது, எங்களுக்கு வெட்கமாக இருக்கிறதல்லவா என்று கேட்கிறார். இல்லை. கடவுளின் பிரதிநிதி—பூதேவர்—பூசுரர்—என்றபட்டப் பெயரும், பதவியும், பெறும் 'குலம்' அவர்—என்பதை அறிந்திருக்கும் நாங்கள், அவர் கவர்னர் ஜெனரலாக அமருவது கண்டு, ஆச்சரியத்தால் மூர்ச்சையாகிவிடமாட்டோம். அச்சப்படவோ பொச்சரிப்புக்கொள்ளவோ மாட்டோம். வெட்கப்படவும் அவசியமில்லை. ஆனால் வெட்கப்பட வேண்டியவர்கள் சிலர் இருக்கிறார்கள்—அவர்கள் யார்? ஆச்சாரியார், தமிழ்நாடு காங்கிரசுக்குத் தலைவராக இருக்கவே இலாயக்கற்றவர், என்று கண்டித்து, கேலிபேசி குன்றம் ஏறிக் கூறினவர்கள்! அவர்கள் வேண்டுமானால் வெட்கப்படவேண்டும், நாம் யாரைக் கண்டித்தோமோ, அவரை இப்போது நாம் 'தரிசிக்க'வே, அனுமதி கேட்டுப் பெற வேண்டுமே—அவ்வளவு உயர்ந்து விட்டிருக்கிறாரே—அவரை, ஏதோ, நமது வீர தீர பராக்கிரமத்தால் வீழ்த்தி விட்டோம் என்றெல்லாம் கூறினோமே, இப்போது, அவர், கவர்னர் ஜெனரலாக இருக்கிறாரே, என்றெண்ணி வெட்கப்பட வேண்டும். எங்களுக்கு இல்லை அந்த அவசியம்.

*

# எது முக்கியம்?

ஆலோம்ப்ரா, பர்மாவில்ஒரு கூட்டத்தின் தலைவன், தன்னைத்தானே ஆளுவோனாக ஆக்கிக் கொண்டான். 1750-ல் இது நிகழ்ந்தது. பின்னர், அவன் வழி வந்தவர்களுக்கு ஆதிக்க ஆசை அதிகரித்து, பர்மாமுழுவதையும் அணைத்து, இந்தியாவிலுள்ள அஸாம் மாகாணத்தையும் அபகரித்துக் கொண்டனர். அத்துடனும் நாடுபிடிக்கும் வெறி தணியவில்லை. 1824-ல் கக்சார்பிரதேசத்திலும் பர்மியப் படை புகுந்தது. ஆங்கிலேயர் சீற்றம் கொண்டனர். சிட்டகாங் ஜில்லாவைச் சேர்ந்த ஷாபூரி எனும் தீவின் மீது, பர்மியர் முன்னரே பாத்யம் கொண்டாடினர். கல்கத்தாவிலிருந்த கம்பெனி அதிகாரிகள், பிணக்குப் பெரும்போராக மாறிவிடாமல் இருக்க, பேச்சு வார்த்தைகள் நடத்தினர். பயனளிக்கவில்லை. 1824-ல் ஆங்கிலேயர் படை, அஸ்ஸாமிற்கு அனுப்பப்பட்டது, அங்குள்ள பர்மியப் படையை சந்திக்க.

கடற்படையெடுப்பால் இரங்கூனைப் பிடித்துக்கொள்வதெனத் திட்டம் தீட்டப்பட்டது கம்பெனியால். அதேபோல் இரங்கூன் ஆங்கிலேயர் வசமாயிற்று. பெருமழையின் விளைவாக, மேலும் இராணுவநடவடிக்கை சாத்தியமில்லாமற் போயிற்று. இது கண்ட பர்மிய தளபதியில் திறமைமிக்க ஒருவன், வடகிழக்கு வழியாக பெங்காலைக் கைப்பற்ற முயன்றான். இராமு எனும் இடத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடித்தான்.

இதன் விளைவாகப் புதிய இரண்டு திக்குகளில் படையெடுத்தனர் ஆங்கிலேயர். இரண்டிலும் தோல்வியே ஏற்பட்டது. ஆனால் இரங்கூனைப் பிடித்த ஆங்கிலப்படை, ஐராவதி நதி வழியே சென்று டோனுபியு எனும் இடத்தில் பர்மியப்படையை முறியடித்து, பாண்டுலா எனும் தலைவனையும் கொன்றது. மேலும் பல இடங்களைப் பிடித்துக்கொண்டு பர்மிய அரசனின் தலை நகரைநெருங்கியது. ஆபத்தை நன்குணர்ந்த அரசன் 1826-ல் ஆங்கிலேயரோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதன்படி, அஸ்ஸாம், கக்சார் பிரதேசங்களில் பாத்தியதை கொண்டாடுவதில்லையென்றும், மணிப்பூர் சுதந்திரத்தை ஒத்துக் கொள்வதாகவும், வடகிழக்கு எல்லையில் கேந்திரஸ்தானங்களான அரகான்—டெனாஷெரிம் மாகாணங்களை பிரிட்டிஷாருக்கு விட்டுவிடுவதென்றும் ஏற்பாடாயிற்று.

முன்னர் சொன்ன ஒப்பந்தப்படி பர்மிய அரசன் நடக்கவில்லை எனும் ஆதாரமற்ற காரணத்தைக் காட்டி, 1852-ல் மீண்டும் பிரிட்டிஷார் பர்மா மீது படையெடுத்தனர். அன்று கவர்னர் ஜெனரலாக இருந்த டலெளசியே இரங்கூனுக்கு நேரில சென்று போரைக் கண்காணித்தார். இறுதியில் பர்மா முழுதும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டது.

19வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவை நிகழ்ந்தன. ஆதிக்க வெறி பிடித்த ஆங்கிலேயர்கள் இதனைச் செய்தனர். பர்மியர் வறுமையில் வாடி வதங்கின காலத்தில், ஆங்கிலேயர்கள் சுகவாழ்வில் சுகித்தனர். இவ்வளவும் பழங்கதையாகப்போய் விட்டது. உரிமை வேட்கை கொண்டு, கடமை தெரிந்து கடனாற்றும் காளைகளைக் கொண்ட பர்மாவை மேலும் அடக்கியாளுதல் முடியாது எனும் நற்புத்தி தோன்றி, ஆங்கில ஏகாதிபத்தியம் பர்மாவோடு நட்பு முறையில் வாழ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இனி, இத்தகைய போக்கினால்தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து கடனாற்றுகிறது ஆங்கில அரசு. நிற்க,

மணிப்பூர், அஸ்ஸாமிற்கும்—பர்மாவிற்கும் இடையிலுள்ள ஒருசிறிய சமஸ்தானம். ஏழாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள காபாஸ் பள்ளத்தாக்கு, பர்மாவிலுள்ள மேல் சிண்ட்வின் ஜில்லாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மணிப்பூர் சமஸ்தானத்திற்குச் சொந்தமாகும் எனும் பிரச்னையைக்கிளப்பி இருக்கிறது. பர்மியர் படையெடுத்தபோது ஏற்பட்ட 1834-ம் ஆண்டு ஒப்பந்தப்படி, அப்பிரதேசம் பர்மாவோடு இணைக்கப்பட்டுப் போய்விட்டது. பின்னர் மணிப்பூர் மன்னருக்கும், பிரிட்டிஷாருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைபபடி, அப்பிரதேசத்திற்காக மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் மன்னருக்குத் தந்து விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டு, அதன்படியே கொடுக்கப்பட்டும் வந்தது. 1947-ல் இந்திய சுதந்திரச்சட்டப்படி மணிப்பூர் மன்னர் பெற்றுவந்த 500 ரூபாயில் மண் விழுந்தது. எனவே மன்னருக்குக் காபாஸ் பள்ளத் தாக்கின் மீது கவனம் சென்றிருக்கிறது. அந்நாள் [illegible]ணிப்பூரோடு ஒன்றுபடுத்த [illegible] னும் கிளர்ச்சியைத் துவக்கி இருக்கிறார். பர்மா சுதந்திர சட்டத்தில், காபாஸ் பிரதேசத்தைப் பர்மாவுடன் சேர்க்கக் கூடாதென வேண்டுகோள் விடுத்துள்

(6-ம் பக்கம் பார்க்க)

# நினைத்தது நடக்கிறது!

இந்திய டொமினியன் அரசு, ஏர் இந்தியா இண்டர் நேஷனல் லிமிடெட் எனும் பெயரிய, ஆகாயவிமான ஸ்தாபனத்தை ஆரம்பித்திருக்கிறது. ஐரோப்பிய நாடுகளுக்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் விமானங்களை விடுவதே அதன் நோக்கம். அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 7-கோடி. ஆரம்பத்தில் செலுத்தப்படும் மூலதனம் ரூபாய் 2-கோடி. தனிநபர்களும் அரசாங்கமும் சேர்ந்து செய்யப்படும் தொழில்திட்டம் இது. 49-சதவிகிதம் பங்குகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாகும். மேலும் 2 சதவிகிதம் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. தொழிலின் நடைமுறைத் திட்டங்களையும் லட்சியங்களையும் நிறைவேற்றுவதற்கும், திறமையாக வியாபார முறையில் இத்தொழிலை நிர்வகிப்பதற்கும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

துவக்கத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யச் சர்க்கார் உதவித் தொகையும் தர இருக்கிறது. ஆனால் அந்த உதவித் தொகை திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு திருப்பக் கொடுக்கப்படுகிற வரையில் மற்றப்பங்குதாரர்களுக்கு, லாபத்தில் 5 சத விகிதந்தான் பங்களிக்கப்படும். மீதமிருக்கும் லாபத்தில் 50 சத விகிதம் அரசாங்கத்தைச் சேரும்.

பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகளால் இத்தொழில் நிர்வகிக்கப்படும். அரசாங்கத்தின் அனுமதி பெற்றவர் அதன் தலைவராக இருப்பார்.

விமானங்களைத் தினப்படி நிர்வகிப்பதும் பிரயாணச் சீட்டுகளை விற்பதும், இவைசம்பந்தமான மற்றக்காரியங்களை மேற் பார்ப்பதும், ஏர் இந்தியா லிமிடெட் ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப் படுகிறது. அப்பொழுதுதான் தொழில் திறமையாக நடைபெற வழி ஏற்படுமாம். நல்ல திட்டமாகத்தான் தோற்றம் இருக்கிறது. ஆனால்—செயலில்?

இந்தியநாடு அரசியல் சுதந்திரம் பெற்று விட்டது என்பதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு. நாட்டு முன்னேற்றத்திற்கான காரியங்களில் ஈடுபடுவதைத் தடுக்க வெளியார் எவர்க்கும் அதிகாரம் இல்லை. ஆனால் இன்று பூர்ண உரிமையுடன் உள்ள இந்திய அரசு, இப்புதிய தொழிலை ஏன் தனிமையில் செய்தல் ஆகாது? ஏன் முதலாளிகளைக் கூட்டாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்? தேவைப்படும்முதலைப்போட்டுச்சொந்தத்தில் நடத்த அரசாங்கத்தினிடம் போதிய பணவசதி இல்லையா? திறமையாக நடத்தத் தொழில் பயிற்சி உடையவர்கள் நாட்டில் கிடைக்க மாட்டார்களா?

யுத்தகாலத்தில் இங்கு லட்சக் கணக்கில் மக்கள் பட்டினி இருந்து மடிந்தும், பலர் அரை வயிறு கால் வயிறு உண்டு, கோடிக்கணக்கில் பணஞ் சேர்த்தனரே, அவ்வளவும் இங்கிலாந்தில் குவிந்து கிடக்கிறதே, அந்தப் பெருந் தொகையிலிருந்து விமானங்களைப் பெற்று, அரசாங்கமே மொத்த முதலும் போட்டு, அரசாங்கத்தின் மேற் பார்வையிலேயே இத்தொழிலை நடத்துதல் கூடாதா? லாபகரமாக நிர்வாகஞ் செய்யத் தொழில் தெரிந்தவர்கள் இங்கு கிடைக்கவில்லையானால், அவசிய மற்ற எதை எதையோ கற்க—பயிற்சி பெற மற்ற நாடுகளுக்கு சர்க்கார் செலவில் ஆட்களை அனுப்பப் படுகிறதே, அதே போன்று இதற்கும் கற்றவர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்புவது கூடாதா?

சர்க்காரே முழுப் பொறுப்பேற்று நடத்துவதால், வருகிற லாபத்தால், மக்களுக்கு நலம்பயக்கும் மற்றத்திட்டங்களைத் தொடங்கவழி பிறக்குமே. ஏன் இம்முறையை அரசாங்கம் மேற்கொள்ளாது, முதலாளிகளையும் கூட்டாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்? இங்கிலாந்திலும், ஆஸ்ட்ரேலியாவிலும் இத்தொழிலைச் சர்க்கார் நல்ல முறையில் வெற்றிகரமாக நடத்தி வருகிறதே, இதனைப்பார்த்த பின்னராவது இந்திய அரசாங்கம் அவ்வழியைப்பின்பற்றுதல்கூடாதா?

அதிக மூலதனம் போட்டு நடத்த முடியாத தனி நபர்களுக்கு மூலதனத்தில் பெரும் பகுதியைக் கொடுத்து, அவர்களின் வருவாயைப் பெருக்குவதின் மூலம், அவர்கள் ஆதிக்கம் என்றென்றும் சீர்குலையாமல் இருக்க, இக்கூட்டுத் தொழில் முறையால் வழி செய்ததாகாதா? ஆரம்பத்தில் ஏற்படும் நஷ்டங்களுக்குச் சர்க்கார்உதவியும் செய்வதானால், லாபகரமாகத் தொழில் நடந்த போதிலும், மொத்தப் பலா பலனையும் தாங்களே பெறவேண்டும் எனும் பேராசையின் காரணமாக, அரசாங்கத்தின் தலையிட்டால் தொழிலில் நஷ்டந்தான் ஏற்படுகிறது என்று புள்ளி விவரம் காட்ட முதலாளிகளுக்குத் தெரியாதா என்ன? இப்போரில் எந்தெந்தத் தகாத முறைகளில் எல்லாம், அரசாங்கம் விதித்த வரிகள் அனைத்திலும் முழுதும் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக் கொண்டுள்ளார்கள். இப்பழக்கத்தை, இப்புதுத் தொழிலுக்கும் உபயோகித்துக் கொள்ள மாட்டார்களென்று எவரால் உறுதி கூறமுடியும்?

அனுபவசாலிகளின் ஆலோசனைப்படி நடக்க இருக்கும் அரசாங்கமும், தேர்ச்சி பெற்றவர்கள் கூறும் ஆய்வுரையை எவ்வாறு புறக்கணித்து விடும்? நாள் செல்லச் செல்ல அனுபவசாலிகளின் ஆதிக்கம் வளர்ந்து, தொழில் முழுதும் முதலாளிகளின் சொந்தச் சொத்தாகப் போய் விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இப்புதிய தொழிலால் முதலாளிகளின் நீண்ட நாளைய கனவு நினைவாகவும், மேலும் பணம் குவியவும், ஆளவந்தார்களை ஆட்டிப் படைக்கவும், முதலாளிகளுக்கு இது நல்லதோர் வாய்ப்பாகவே அமையும். 'பொதுஜனம்' தேசத்தின் கவுரவம் காப்பாற்றப் படுகிறது எனத் திருப்திப் படுவதோடு முடியும்!

✻

## ராஜகுடும்பம்!

கபூர்தலா சமஸ்தானத்தைச் சார்ந்த ராஜகுமாரி இந்திரா, குடித்துவிட்டு, மோட்டாரைத் தாறுமாறாக லண்டனில் ஓட்டிக்கொண்டு சென்றதற்காக, நவம்பர் 13-ந்தேதி, கைதுசெய்யப்பட்டு, லண்டன் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டார். ஜாமினில் வெளிவந்திருக்கிறார். ராஜகுடும்பத்தைச் சார்ந்த இந்த அம்மையின் வயது 34.

✻

# ★ நிபுணன் நியூட்டன் ★

[இராதாமணாளன்]

"நியூட்டன் எப்படியிருக்கிறான் படிப்பில்?"

"ஏதோ படிக்கிறான்! கணிதத்தில் பரவாயில்லை! சில பாடங்களில் சுமார்! மற்றையதில் மக்குத்தான்!"

"படிக்க வைப்பது வீண்தானா?"

"அப்படியில்லை அம்மா! படிப்பில் சிறிது மந்தமாகயிருந்தாலும் கைத்தொழிலில் மிகுந்த கெட்டிக்காரனாக இருக்கிறான்!"

"எனக்கென்னமோ அவன் படித்து முன்னுக்கு வருவானென்ற நம்பிக்கையே இல்லை!"

இதுபோல நியூட்டனின் அன்னைக்கும், அவனது ஆசிரியருக்கும் பேச்சு நடந்தது. மாநிலம் போற்றும் ஸர் ஐஸக் நியூட்டன் தன் இளம் வயதில் படிப்பில் மந்தமாகத்தானிருந்தான்.

இங்கிலாந்திலுள்ள, லிங்கன்ஷைரைச் சார்ந்த வூல்ஸ் தோர்ப் (Woolsthorpe) என்ற சிற்றூரில், 1642 ஆம் ஆண்டு நியூட்டன் பிறந்தான். ஐஸக் நியூட்டன் பிறப்பதற்கு முன்பே, அவனது தந்தை உயிர் நீத்தார். தந்தையிறந்தாலும், போதுமான சொத்து இருந்ததால், யாதொரு கவலையுமின்றி நியூட்டன் வளர்ந்து வந்தான்.

இயற்கை அழகு சூழ்ந்த வீட்டில் நியூட்டன் பிறந்தான். அந்த வீடு மிகவும் அமைதியான இடத்திலிருந்தது இன்றும் இங்கிலாந்திற்குச் செல்லும் விஞ்ஞானிகளும், அறிஞர்களும் அந்த வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டு வருவது வழக்கம்.

நியூட்டன் இரண்டாம் வயதை யடைந்ததும், அவன் தாய், ஆங்கில நாட்டு முறைப்படி மறுமணம் செய்து கொண்டாள்; குழந்தையை அவனது பாட்டியின் மேற்பார்வையில் விட்டுவிட்டு, அவன் அன்னை புதுக் கணவனுடன் நார்த்விதாம் என்ற ஊரில் வசித்து வரலானாள்.

வூல்ஸ் தோர்ப்பிலிருந்த நிலத்திலிருந்து கிடைத்த வரும்படியை நியூட்டனின் கல்விக்காக ஒதுக்கி வைத்தாள். அவளை மறுமணம் செய்து கொண்டவன் நல்ல ஒழுக்கமும், அறிவும் அன்புமுடையவன். அவன் நியூட்டனின் செலவுக்காக ஆண்டொன்றுக்கு ஐம்பது பவுன் வருமானம் கிடைக்கும் நிலத்தை இனமாகக் கொடுத்தான்.

நியூட்டனின் பாட்டி, நற்குணமும் அன்பும், திறமையும் மிக்கவள். அவள் ஆசையோடும் அன்போடும் குழந்தையை வளர்த்து வந்தாள். படிப்பிற்கேற்ற வயதை அடைந்ததும், பாட்டி அவனை வூல்ஸ் தோர்ப்பிலிருந்து ஒருமைல் தூரத்திலிருந்த ஒரு சிறிய பாடசாலைக்கு அனுப்பினாள். அங்கு தன் பனிரண்டாம் வயது வரைக்கும் படித்துவிட்டு, ஊருக்கு ஆறுமைல் தொலைவில கிராந்தாம் என்ற ஊரில் உயர்தரப் பள்ளியில் சேர்ந்து படித்து வரலானான். கிராந்தாமில் அவன் அன்னைக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் தங்கியிருந்தான்.

சிறுவயதில் நியூட்டனுக்குக்கல்வி சரியாக வரவில்லை. ஏட்டுக்கல்வியிலே அவன் நாட்டம் அதிகம் செல்லவில்லை. அவன் உள்ளம், உளி, ரம்பம், சுத்தி, பலகை இவற்றைக் கொண்டு சிறு சிறு இயந்திரங்கள் செய்வதிலே நாட்டங் கொண்டிருந்தது. நம் நாட்டில் இன்றிருப்பது போலவே, அன்று அங்கு பாட திட்டத்தில் கைத்தொழிலும் ஒரு பகுதியாகச் சேர்க்கப் படாததினால், அவனது கைத் திறமைக்குப் பாடசாலையில் மதிப்புத் தரவில்லை.

பாடசாலையில் அவனுக்கு மதிப்பில்லையே அன்றி, ஊரில் பலரும் அவன் செய்யும் சின்னஞ் சிறு சாமான்களைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். அவனது பாட்டியும், அன்னையும் படிப்பில் கவனக் குறைவாயும், 'வெட்டி வேலையில்' வீணாகப் பொழுதைப் போக்குவதாகவும் குறை கூறினார்கள்!

சக்கரங்கள், வில்விசை (Spring) இவைகளில்லாமலே நியூட்டன் ஒரு புதிய கடிகாரத்தைக் கண்டு பிடித்தான். அந்தக் கடிகாரத்தைக் கண்டு அனைவரும் ஆச்சரியப் பட்டனர். அவன் பாட்டி, சுலபத்தில் மணியறிந்து கொள்வதற்காக ஒரு சூரிய கடிகார முகப்பு அட்டையும் (Sundial) நீர்க்கடிகாரத்தையும் (Water-clock) செய்தான். அவன் செய்த சூரிய கடிகார முகப்பு அட்டை இன்னும் அந்தப் பழையவீட்டில் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

கிராந்தாம் கிராமத்துச் சிறுவர்களுக்கு அதற்குமுன்பு காற்றாடி என்றால் என்னவென்றே தெரியாது! முதன் முறையாக அக்கிராமத்தில் ஒரு சிறிய காற்றாடியைச் செய்து, ஆகாயத்தில் பறக்க விட்டான் நியூட்டன். அதனைக்கண்ட சிறுவர்களும் பெரியவர்களும் அவனைப் பாராட்டினார்கள். ஒரு நாள் இரவு, காகிதத்தினால் கூடுபோல் செய்து, அதிலே ஒரு சிறிய விளக்கை வைத்து ஆகாயத்தில் பறக்கவிட்டான், வானத்தில் ஒளியைக்கண்ட அவ்வூர் மக்கள், அதனை வால் நட்சத்திரமொன்று நினைத்துக்கொண்டு மிகுந்த அச்சமடைந்தனர். உண்மை தெரிந்ததும் வெட்கிப், பழையபடி நியூட்டனின் திறமையைப் புகழ்ந்தார்கள்.

புதுப் புது சிறு இயந்திரங்கள் செய்வதில் ஆற்றல் பெற்றிருந்தது போலவே, கணக்கிலும் ஆர்வமும் திறமையும் பெற்றிருந்தான். காற்றின் வேகத்தை அளவிடும் வழியை மிகவும் எளிய முறையிலிருந்து தெரிந்து கொண்டான். ஒருநாள் அவன், காற்று வீசும்பொழுது காற்றிற்கு எதிரிடையாகக் குதித்தான். குதித்த தூரத்திலிருந்து காற்றின் வேகத்தை (The force of the wind) கணக்கிடும் விதத்தைத் தெரிந்து கொண்டான்.

இப்படி அவன் இளம் வயதில் விளையாடும் நேரங்களில் கூட இயற்கையின் தத்துவங்களையும், இரகசியங்களையும் நுணுக்கமாகக் கவனித்து ஆராய்ந்து வந்தான்.

1656 ஆம் ஆண்டு, நியூட்டனுக்குப் பதினைந்காம் வயதில அவனது அன்னையின் கணவன் இறந்துவிடவே, அவள் வூல்ஸ் தோர்ப்பிற்கே வந்துவிட்டாள்.

நியூட்டன் படிப்பில் கவனக் குறைவாய் இருந்தாலும், அவன் படித்து முன்னுக்கு வர முடியாதென்ற எண்ணம் அவன் அன்னை கொண்டிருந்தாலும், அவனை, அவள் படிப்பிற்கு அனுப்புவதை நிறுத்தி விட்டு, தன்னுடன் விவசாயத்தில் உதவி புரியும்படி செய்தாள்.

பயிர்த் தொழிலில் ஈடுபட்ட நியூட்டன், பகலவனையும், மதியையும், மழையையும், காற்றையும் கண்டு கண்டு சுவைத்து இன்புற்றான். விவசாயத்தை விட விஞ்ஞானமே அவனது உள்ளத்தை மிக மிகக் கவர்ந்தது. வயலில் அவன் உடல்

வேலை செய்து கொண்டிருந்தாலும், அவன் உள்ளம் எந்தச் சாமானை யாப்படிச் செய்யலாமென்று எண்ணிக் கொண்டேயிருக்கும்.

உழுது பயிர் செய்வதிலும் ஊக்கமில்லாத நியூட்டனை, என்ன செய்வதென்றே தோன்றாமல் அவள் யோசித்தாள். அப்படியே இரண்டாண்டுகள் வீணாயின. பிறகு நியூட்டனின் பழைய ஆசிரியர் ஒருவரின் யோசனையின்படியே திரும்பவும் அவன் பாடசாலைக்கு அனுப்பப்பட்டான். சிறிது அக்கறையுடனே படித்துத் தேறி, தன் பதினெட்டாம் வயதில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ட்ரினிட்டி கல்லூரியில் (Trinity college) சேர்ந்தான்.

கல்லூரியில் லத்தீன் கிரேக் ஆகிய மொழிகளையும், கணிதம், வானநூல் ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தான். கணிதமென்றால் நியூட்டனுக்குத் தேன்! அவ்வளவு ஆர்வத்தோடு, ஊக்கத்தோடும் கணிதக்கலை மட்டும் கற்றுவந்தான். இருபத்திரண்டாம் வயதில் பி. ஏ., பட்டம் பெற்றான்.

பட்டம் பெற்ற ஆண்டு, கேம்பிரிட்ஜ் சுற்றுப்புறத்தில் ஒருவிதமான கொள்ளைநோய் பரவியதால், கல்லூரியை மூடி விட்டார்கள். ஆகையால் நியூட்டன் தன் சொந்த ஊரில் வந்து தங்கினான். வூல்ஸ் தோர்ப்பில் ஒன்றரை ஆண்டு தங்கியிருந்தான்.

ஒரு நாள் தன் வீட்டின் தோட்டத்தில் படுத்துக்கொண்டு எதைக் குறித்தோ சிந்தித்தவண்ணமிருந்தான். அப்பொழுது ஒரு ஆப்பிள் பழம் மரத்திலிருந்துகீழேவிழுந்தது. அப்படிப் பழங்கள் விழுவதை அதற்கு முன்பு பல தடவைகள் பார்த்திருந்தாலும், சிந்தனையில் ஆழ்ந்திருந்த நேரத்தில்விழுந்ததால், அப்படி விழுந்த பழம், அவன் சிந்தனைக்குப் புதிய வேலையைக் கொடுத்தது.

“பழம் ஏன் நேராகக் கீழே விழ வேண்டும்? ஆகாயத்தை நோக்கி ஏன் செல்லவில்லை? அல்லது பக்க வாட்டிலும் செல்லாத காரணமென்ன?” இப்படி அவன் மனதில் பற்பல கேள்விகள் எழுந்தன! ஒவ்வொரு கேள்விக்கும் யோசித்து யோசித்துப் பதில் தயாரித்தான்.

இப்படிச் சிந்தித்துப், பூமியின் கீழிலிருக்கும் ஏதோ ஒரு சக்தி, பூமியின் மேலேயுள்ள எல்லாப் பொருள்களையும் தன்னை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கிறது என்ற உண்மையைக் கண்டு பிடித்தான். அப்படிப் பூமியின் மத்தியிலிருந்து பொருள்களை இழுக்கும் அந்தச் சக்திக்கு இழுக்கும்சக்தி (Force of gravity) என்று பெயரிட்டான்.

பிறகு பூமியிலிருந்து எவ்வளவு தூரம் வரை பொருள்களை இழுக்கும் ஆற்றல் அந்தச்சக்திக்கு இருக்கிறது என்று ஆராயத் தொடங்கினான். “சந்திர சூரிய மண்டலங்களை அடையும் பொழுதும் அதைத் தாண்டிச் செல்லும் பொழுதும் இந்தச்சக்தியின் இழுக்கும் தன்மை எந்த நிலையை அடைகிறது? சக்தி குறையுமா? அதிகரிக்குமா? அல்லது ஒரே நிலையாக இருக்குமா?” இப்படித் தனக்குத்தானே பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டான்.

பூமியைத் தாண்டித் தூரம் அதிகரிக்க அதிகரிக்க இச்சக்தியின் இழுக்கும் ஆற்றல் குறைந்து கொண்டே போகுமென்ற தத்துவத்தைக் கண்டு பிடித்தான்.

ஆகாயத்திலிருக்கும் கோளங்கள் ஒன்றை ஒன்று இழுக்கக்கூடிய பொதுச்சக்தி ஒன்றிருப்பதினால்தான், அவைகள் தத்தம் கோடுகளில் செல்லுகின்றன என்ற உண்மையைக் கண்டு பிடித்து உலகத்திற்குச் சொல்லிய பெருமை நியூட்டனுக்கே உரியது!

1667-ஆம் ஆண்டு, கொள்ளை நோய் நின்றதும், நியூட்டன் கல்லூரியில் சேர்ந்து எம். ஏ. படித்து வரலானான். கணிதப் பேராசிரியர் பாரோ (Parrow) அவனது கணித நுண்ணறிவைப் பாராட்டி, அவன் கண்டுபிடித்த புதிய தத்துவங்களை வெளியிடச் செய்து பலரும் அறியும்படி செய்தார். விரைவில் அவனது புகழ், பிரான்ஸ் இத்தாலி ஆகிய அயல் நாடுகளிலும் பரவத் தொடங்கியது.

நியூட்டன் படித்து எம். ஏ. பட்டம் பெற்றதும், பாரோ, சமயத் துறையில் ஆராய விரும்பி, தம் பதவியை ராஜிநாமாசெய்து விட்டு, அப்பதவியை நியூட்டனுக்குத் தரும்படி, சிபார்சு செய்தார். அதிகாரிகள் பலர் மறுத்தநேரத்தில், “நியூட்டனை இளைஞனென்று கருதாதீர்கள்! உண்மையில் எனக்கும் கணிதத்தில் சிறிது பயிற்சி உண்டு. ஆனால் என்னை நியூட்டனோடு ஒப்பிடும் பொழுது, அவன் முன்பு நான் ஒரு பள்ளிக்குழந்தைதான்!” என்று கூறினார். பிறகு அதிகாரிகள் இசைந்தார்கள். நியூட்டன் தன் இருபத்தாறும் வயதில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கணிதப் பேராசிரியராக வேலை பெற்றான்.

ஓய்வு நேரத்தைக் கணிதத்தைத் தவிரமற்றும் வெவ்வேறுதுறைகளில் அறிவுபெற அவாவி, அதற்காக ஒரு அறையைச் சோதனைக் கூடமாக (Laboratory) வைத்துக்கொண்டு உழைத்து வரலானான். விஞ்ஞான வேலைக்குத் தேவைப்படும், கண்ணாடி வட்டங்களை (Lens) தானே தயார் செய்தான். கண்ணாடியை வழவழப்பாக்கும் புதிய முறையைக் கண்டு பிடித்து, உபயோகித்தான். அன்று அவன் கண்டுபிடித்த அந்த முறைதான் நடைமுறையில் இன்றுமிருக்கிறது. ஒளியைப் பற்றிய செய்திகளை இடைவிடாது ஆராய்ந்த வண்ணமிருந்தான்.

வேலையில் அவன் உள்ளம் ஆழ்ந்து விட்டால் சுற்றுப்புறங்களில் நடப்பதொன்றும் அவனுக்குத் தெரியாது. சில நேரங்களில் சாப்பிடவும் மறந்து விடுவான். ஒருநாள் அவனுக்கு வந்திருந்த உணவை, அவன் தோழனொருவன் சாப்பிட்டுவிட்டு, தட்டுகளைப் பழையபடியே மூடிவைத்து விட்டு சென்றுவிட்டான். நியூட்டன் வேலை முடிந்ததும் சாப்பிட வந்தான். தட்டுகள் காலியாக யிருப்பதைக் கண்டதும், “நான் முன்பே சாப்பிட்டு விட்டதை மறந்துவிட்டேனே!” என்றெண்ணிக் கொண்டு, திரும்பவும் வேலையில் ஈடுபட்டான்.

ஒளியைப் பற்றிய ஆராய்ச்சியில், கேம்பிரிட்ஜில் நியூட்டன் சில காலத்தைச் செலவழித்து, அதற்கு முன் யாரும் கண்டுபிடிக்காத நுணுக்கமான தத்துவங்களைக் கண்டுபிடித்தான்.

“தூய மஞ்சள் நிற ஒளிதான் தனித்து நிற்கக்கூடிய தன்மையைப் பெற்றது. அதன் குணத்தை மாற்ற முடியாது. ஆனால் நாம் காணும் வெள்ளை நிறமான ஒளி அத்தன்மையது அல்ல. வெள்ளை நிற ஒளியானது ஏழு வர்ணங்களின் சேர்க்கையினால் ஆகியது. சூரியனின் ஒளி வெண்மையாக யிருப்பதற்கு வானவில்லில் காணப்படும் ஏழு வர்ணங்களின் சேர்க்கைதான் காரணம்!” இந்த இயற்கையின் இரகசியத்தை வெளிப்படுத்தினான்.

ஒளியைப் பற்றி ஆராய்ந்த பிறகு, வானநூலில் தன் நாட்டத்தைச்

செலுத்தினான். புதிய முறையில் தொலை நோக்கி (Telescope) ஒன்றைக் கண்டுபிடித்தான். அந்தத் தொலை நோக்கி அவனுக்கு வேறு புகழை அள்ளித் தந்தது.

நாளுக்கு நாள் புகழ் பெருகிக் கொண்டே வரும் நியூட்டனை ராயல் சொசைட்டில் (The Royal Society) 1672-ஆம் ஆண்டு ஒரு அங்கத்தினனாகச் சேர்த்துக் கொண்டார்கள்.

புதியதாக ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளைப் பரிசோதித்து அச்சிடவும், விஞ்ஞானிகளை ஊக்குவிக்கவும் அச்சங்கம் ஏற்படுத்

(5-ம் பக்கம் பார்க்க)

## நானிருக்க பயமேன்

2-ம் பக்கத் தொடர்ச்சி

சுகு:—அட இது தெரியாதா பிரதர், அங்கு இருக்கிற சாயிபாபா மடத்துக்குப் போவோம். வசந்தா, லலிதா, லத்தாங்கி, கல்யாணி,........

சுந்:—என்ன துணிச்சல் பிரதர் உனக்கு. சாயிபாபா மடம் உன் காதல் வேட்டைக்கு இடமா?

சுகு:—அடடே! நீ என்னப்பா விபரீதமான அர்த்தம் செய்துட்டே அந்த 'ராகங்கள்' கேட்கலாம் என்றேன்.

சுந்:—கேட்கப் போகிறாயோ, பார்க்கப் போகிறாயா? சரி வா, போவோம்.

* * * *

டேய், கந்தா இன்னிக்கு என்னடா நமக்கு வரும்படியேயில்லை. போகும்போது பிள்ளையாருக்குப் பிரார்த்தனை கூடச்செய்து கொண்டு தானே போனேன். அப்படியிருந்தும் ஒண்ணும் நம்ம திருட்டுக்கைக்கு அகப்படலியே.

முருகன்:—கந்தா, இனிமே இந்தப்பழையகடவுள்களை எல்லாம் நம்பி நம்ம காரியத்தைச் செய்தால் எதுவும் பலிக்காது. இப்போதான் "வேண்டும் வரம் தரும்" புதுக்கடவுள் சாயிபாபா இருக்கிறாரே. அவர் பக்தனாகிவிட்டால் ரொம்ப லாபம் கிடைக்கும்.

கந்:—அப்படின்னா நான் இப்பொழுதே எல்லாப்பழையகடவுள்களையும் மறந்துவிடுகிறேன். இனிமே எனக்கு சாயிபாபா தான் துணை. நம்ம தொழிலை எப்படி இன்னிக்கு நடத்தறது?

முரு:—ரொம்பச்சுலபமாச்சே. மயிலாப்பூரிலே சாயிபாபா மடத்திலே நவராத்திரிக்காக கச்சேரி தினம் நடக்கிறது. பெண்கள் எல்லாம் பெட்டியிலேயிருக்கிற நகைகளை மாட்டிக் கொண்டு கச்சேரிக்கு ஏராளமாக வருகிறார்களாம். அங்கே போனா நமக்கு வரும்படிக்கு குறைவேயிருக்காது.

கந்:—நல்லா சொன்னே முருகா. அப்படின்னா இப்பவே ரெண்டுபேரும் புறப்படலாம் சாயிபாபா மடத்திற்கு. அவர் மகிமையே கிமை.

* * *

சாயிபாபா மடத்திலே கச்சேரி முடிந்து பாபாவுக்கு பூசை நடக்கின்றது. சாயிபாபா பக்தர்கள் எழுந்து நின்று "சாயிபாபா" "சாயிபாபா" என ஊனும் உடலும் உருக உச்சரிக்கின்றனர் தம்மை மெய்ம்மறந்து. இதனிடையே 'சாயிராம்—சாயிராம்' என்று, மூதாட்டியரிடம் குமரிகள், பக்தர்களில் சிலர், தம்மீது சாய்வது கண்டு, கூறுகின்றனர்.

"ஐயோ கழுத்திலிருந்த செயினைக் காணோமே" என்ற கூக்குரலும் ஒலிக்கிறது. கந்தன்களும் முருகன்களும் சாயிபாபாவின் துணைகொண்டு செய்யும் திருப்பணியின் விளைவு! அவரிருக்க பயமேன் அவர்களுக்கு!

## ஆளுக்கு அரை ரூபாய்!

பட்டாளப் பணிபுரிந்தவர்கள், ஒருவேளை இப்போது 'பகவானை' வேண்டுகிறார்களோ என்னவோ தெரியவில்லை, மற்றொரு யுத்தம் வாராதா என்று. ஏனெனில் இப்போது அவர்களில் மிகப்பெரும்பான்மையினர், வேலையற்று உள்ளனர். போர்க்காலத்தில், அஞ்சா நெஞ்சுடன் பணிபுரிந்தனர் — அப்போது, அவர்களின் பிற்காலத்தைக் கவனிப்பதாகச் சர்க்கார் பிரமாதமான வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வீசிற்று. இப்போது, அவர்கள் நிலை என்ன? சர்க்கார் அவர்களுக்கு, என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

புதிதாகவோ தொழில்வளம் இல்லை. இருக்கும் தொழில்களிலே, அதிக ஆட்களை அதிகச்சொல்லி, நேரத்தைக் குறைத்து, பலருக்கு சந்தர்ப்பம் வழங்கவோ, முதலாளிமார்கள் இசைவதில்லை. முதலாளிகளை அந்த நிலைக்குக் கொண்டு வரவோ, காங்கிரசுக்கு மனமில்லை. காங்கிரஸ் மந்திரி சபைகளுக்கோ, மூன்று வகையான 'படைகளுக்கு' உதவி அளிக்கவேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. ஒன்று, போரில் பங்கெடுத்து வீடுதிரும்பிய படை. — மற்றொன்று, போரின் போது போரில் சேராதே என்று கூறிச் சிறைசென்ற ஆகஸ்டு புரட்சிப்படை, மூன்றாவது, போரின் போது நேத்தாஜி நிறுவிய படை. இம்மூன்றுக்கும், சர்க்கார், வழி காட்டவேண்டிய வேலையை மேற்கொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் பெரிய பொறுப்புக்கு ஏற்ற அளவு வசதி தரக்கூடிய விதத்தில், புதிய தொழிற்சாலைகளை அமைக்கத்திட்டமுண்டா என்றால், இல்லை!

சென்னை மேல்சபையிலே, ஒரு மெம்பர் இதுபற்றிக் கேள்வி கேட்ட போது, டாக்டர் சுப்பராயன் பதில் அளித்திருக்கிறார்—நிலைமை எவ்வளவு 'அழகாக' இருக்கிறதுஎன்பது, அதிலே நன்றாகத் தெரிகிறது. உயிருக்குத் துணிந்து சென்றவர்களுக்கு ஊராள்வோர் தந்த உதவியின் அளவு தெரிகிறது.

1947, ஜூலை 31ந் தேதிவரையில், பட்டாளப்பணியிலிருந்து கலைந்து வந்தவர்களின் தொகை,

**203, 491.**

இவர்களுக்கு வேலை தேடித்தர, சர்க்கார், வசதி செய்ததற்கான செலவு, ரூபா,

**183,000.**

ஏறக்குறைய ஆளுக்கு அரைரூபாய் திட்டம்! அருமையாக இருக்கிறதல்லவா!

*

## அமைச்சர் அறிவாரா?

கரூர்க்கலவர வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் 60 பேருக்குமேல்—ஒரு வருஷத்துக்கு மேலாகச் சிறையில் இருந்து வருகிறார்கள்.

பொன்மலைக் கலவர வழக்கு, விக்ரமசிங்கபுரம் கலவர வழக்கு, கோவை ஸ்டேன்ஸ் மில் கலவர வழக்கு, மதுரை சதி வழக்கு, மலபார் கம்யூனிஸ்டு கோபாலன் வழக்குஎன்ன போன்றவைகள், சர்க்காரால் வாபீஸ்வாங்கப்பட்டன.

கரூர்க் கலவர வழக்கைச், சர்க்கார், வாபீஸ் பெறவில்லை.

—

வெளிவருகிறது! வெளிவருகிறது!!

# "மன்றம்"

(மாத வெளியீடு)

ஆசிரியர்.

இரா. நெடுஞ்செழியன் M. A

முதல் இதழ் 1-1-48-ல்வெளிவரும்

விலை அணா எட்டு.

விபரங்கட்கு:—

மானேஜர்,

"மன்றம்"

30/79 செப்புதாஸ் தெரு சென்னை

## மறைவு

காஞ்சி. கலியாணசுந்தரன் அவர்களின், பெரிய தகப்பனர் சென்ற 1—11—47-ல் காஞ்சியில் இயற்கை எய்தினர். 16—11—47-ல் அவருடைய இறுதிச் சடங்கு நடைபெற்றது. எவ்விதச் சடங்குமின்றி, நண்பர்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் உணவளித்தது டன் சம்பவம் முடிவுற்றது.

## துகிலுரிந்த துச்சாதனி

4-ம். பக்கத் தொடர்ச்சி

படுத்துகிறீர்—என்று கேட்டுக்கை கொட்டிச்சிரித்தனர். நாளாகவாக, இந்தத் 'தேவகதைகள்' மதிப்பிழந்து, மக்கள், உண்மை அறிவை நாடலாயினர். அந்த நீண்டபயணம், இன்று உலகிலே பெரும் பகுதியிலே, ஒரு தெய்வ வழிபாடு என்ற நிலைக்குச் சென்றிருக்கிறது. இங்கோ, முப்பத்து முக்கோடி தேவரும் இருந்தாக வேண்டும் என்று வாதாடுகின்றனர். அவர்களைப்பற்றி உள்ள கதைகளிலே காணப்படும் ஆபாசங்களை எடுத்துக்காட்டினாலோ, மூக்கும் முழியும் சிவக்க, முறைத்துப் பார்க்கின்றனர். ஏன்? கற்பனைகளைக் கண்டிப்பதை, கடவுள் உணர்ச்சியைக் கண்டிக்கும் கயமை என்று தவறாக எண்ணிக் கொண்டு அன்பர் பலர், காய்கின்றனர். இது அவசியமா என்று கேட்கின்றனர். கடவுள்மீது ஏனோ நமக்குக்கசப்பு, எனவேதான், இதுபோல் எழுதிவருகிறோம் என்றும் எண்ணினர். இவ்வளவும், தவறானகருத்தின் மீது கட்டப்பட்ட அவசியமற்ற அபவாதங்கள்.

உலகிலே, எத்தனையோ நாடுகளில் எண்ணற்ற கடவுள்களை, வழிபாட்டுக்குரியனவாகக்கொண்டு,பற்பலவகை விழாக்களை நடத்தியும் வெறியாட்டத்தில் ஈடுபட்டும், வந்தனர். அவர்கள் அவ்வளவுபேரும், ஆழ்ந்தநம்பிக்கையின் காரணமாகவும்,முறைமாறினால் அழிவு நேரிடும், இவ் உலகில் மட்டுமல்ல, மேல் உலகிலும் என்று அஞ்சியே, சிற்சில சமயங்களிலே, தாமகொண்ட நம்பிக்கைகள் சரியல்லவோ, என்ற சந்தேகம் மனதிலே கிளம்பிய உடனே 'சந்தேகச் சாத்தானைவிரட்டிச்சற்குருவின்பாதத்தை நாடு' என்ற போக்கு கொண்டனர். ஆனால் அவர்களின் அச்சத்தையும் ஆவலையும், சின்னாபின்னப்படுத்தி மளவு வேகத்துடன், புத்தறிவுதாக்கலாயிற்று. பிடிவாதமாகவும், பயங்கரமான அருவிகளைத்தூக்கிப்போரிட்டும், பழைமை தோற்றுத்தான் போயிற்று. தோல்வி அடையுமுன்போ, தோத்திரம், மந்திரம், மணிமாலை, மண்டைஓடு, சுடலைமண்; முதலிய எதை எதையோ காட்டி மிரட்டிக் கொண்டிருந்தது.

புத்தறிவின் ஒளிமுன்பு, பழயகால கற்பனையிலே உருவானபல'தேவதைகள்' இருக்குமிடம் தெரியாமல் மறைந்தன. இன்று, அந்தநாடுகளிலே உள்ள இளைஞர்களுக்கு மட்டுமல்ல, முதியோர்களுக்குங்கூட, பழைய தெய்வங்களின் பெயருந் தெரியாது. ஒரு காலத்தில் பராக்கிரமமிக்கன என்று கருதப்பட்டு, பாராண்ட மன்னரின் குமாரிகளையேகூடப் பலிகேட்டுப் பெற்று, விண்ணை முட்டும் கோபுரங்களும், விகசிதமணி மண்டபங்களும்படைத்துச்,சுட்டுவிரலையே செங்கோலாக்கிக் கொண்ட பூஜாரிகள் புடை சூழ வீற்றிருந்த 'தேவதைகள்' இன்று, தேடித்தேடிப்பார்த்தாலும் காணமுடியாத நிலை, அங்கெல்லாம் ஆகிவிட்டது. இதனால் அங்கெல்லாம் அஞ்ஞானமும்நாத்திகமும் தலை விரித்தாடிற்று என்றோ, அருள்மொழி மடிந்து மருளுரை மிகுந்தது என்றோ, கூறுவதற்குமில்லை. அந்த நாடுகளெல்லாம், நமதுநாட்டைவிட நல்ல நிலையிலேயே உள்ளன; நாசமுறவில்லை.

மாடிவீடு கட்டுவதற்கு, முதலில், மரம் கொண்டோ, வெறும் மண் மேடாகக் கொண்டோ, கட்டடமைப்போர், பணி புரிவர்—ஆனால் அடுக்கு உயர உயர, அந்த முறை மாறும்—மாடி வீடு கட்டியானதும், முதலிலே நிறுத்திய, மரக்குவியல், அல்லது, மண் குவியல், இதனை, வைத்துக் கொண்டிரார்—நீக்கிவிட்டு, மாடி சென்று உலவுவர். கதிர் முற்றியதும், பயிரை அழிப்பதா, இப்பயிரன்றோ கதிர் அளித்தது, என்று எண்ணமாட்டார்கள்—அறுவடை செய்வர்—எந்தப் பயிர், செந்நெல்லைத் தந்ததோ, அதனை மிதிப்பர், அவைப்பர், அடிப்பர்.

கருத்துலக அறுவடையும் அது போன்றதே. இதனை அறியாதார், ஆயாசமடைவர் — ஆர்ப்பரிக்கவும் செய்வர். அவர்களேகூட,இம்முறை, அவனியில் பல்வேறு இடங்களிலும் நடந்ததேயன்றி வேறல்ல, புதிதுமல்ல, பொல்லாங்கு நிரம்பியதல்ல, புல்லறிவாளர் போக்கல்ல, என்பதை அறிவர். அதற்காகவே, கற்பனைத் திறனுடனும் காவிய ரசனையுடனும், பண்டை நாட்களிலே, இங்கு, ஆக்கப்பட்ட அருமையான தேவதைகளைப்போல, பலப்பலவற்றை, உலகிலே பல்வேறு இடங்களிலே, அந்தந்த நாட்டு மக்கள் கொண்டிருந்தனர்—கோல் கொண்டோரெல்லாம் குப்புற வீழ்ந்து வணங்கினர் அவற்றின் முன்பு. ஆனால், புத்தறிவு பிறந்ததும், அவைகளின் ஆதிக்கம் போய்விட்டது—மெய்ஞ்ஞானம் உதித்தது; ஏறிச்செல்லவாகனமும்,வாரிஅணைக்க மனைவியரும், இல்லாத ஏகதெய்வக் கொள்கை நிலைநாட்டப்பட்டது என்பதை விளக்குவது அவசியம் என்று எண்ணுகிறோம். இங்கு முன்பு இருந்த, கவிவாணர்கள், கற்பனையில தேறினவர்கள், மனவளம் கொண்டிருந்த அளவிலும் வகையிலும், உலகில் வேறு எங்கும், எவரும் கொண்டிருந்ததில்லை என்ற பொய்யுரையையும், இந்த விளக்கம், பொடியாக்கிவிடும் என்பது நமது நம்பிக்கை. ★

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரர்கள், பணம் அனுப்பும் போதும் கடிதம் எழுதும்போதும் தங்கள் சந்தா நம்பரைக் குறித்தனுப்பவேண்டும். சந்தா நம்பர் குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press, 817—819 Hodgsonpet Conjeeveram.